# போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

ஓராண்டு ரூ. 6 8 0
6 மாதம் ரூ. 3 4 0

"போர்வாள்" நிலையம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.


ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B. A (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 2
வெளி நாடு அணா 2½

வாள் 4 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1981 மார்கழி 8
23—12—50 சனிக்கிழமை | வீச்சு 17


## சணலே, பருத்தியே, வா! வா! உணவே, உணவே, நீ போ! போ!




—'சங்கர்ஸ் வீக்லி'யிலிருந்து!

உணவு உற்பத்தி உணவு உற்பத்தி என்று ஓயாமல் பேசும் டில்லி ஆளவந்தார்கள், இந்த ஆண்டு, அரிசி, விளையும் நிலங்களில், 24 லட்சம் ஏக்கரை சணல் விளையும் இடமாகவும், 14 லட்சம் ஏக்கரை பருத்திப் பயிருக்கான இடமாகவும் மாற்றிவிட்டார்கள்! இதன் விளைவாக அரிசி உற்பத்தியில் 3,70,000 டன் குறைந்துவிட்டது! எப்படியிருக்கிறது கனம் முன்ஷிஜீ உணவைப் பெருக்கும் இலட்சணம்!

# போர்வாள்

[ திராவிடர் வார வெளியீடு ]

| வாள் | திருவள்ளுவர் ஆண்டு 1981 மார்கழி 8 | வீச்சு |
|---|---|---|
| 4 | 23—12—50 சனிக்கிழமை | 17 |


## சர்தார் மறைந்தார்!

இந்தியத் துணைக் கண்டத்தின் துணை-முதல்வர் சர்தார் வல்லபாய் படேல் மறைந்தார் என்ற செய்தி கேட்டு நெஞ்சம் திடுக்கிட்டது. பர்தோலி வரி கொடா இயக்கத்தின் தளபதியாக இருந்து வெள்ளை ஏகாதிபத்தியத்தை அலறச் செய்த சர்தார் இறந்துவிட்டார் காங்கிரஸ் முன்னணி வீரர்களில் சிறந்தவரும், காந்தியாரின் வலக்கரமாக இருந்து செயலாற்றிய திண்மைக் குணம் படைத்தவருமான படேல் மாண்டு விட்டார்.

படேல் ரத்தக்கொதிப்பேறும்படி பல பேசி மக்களைத் தூண்டிவிட்டு, பின்னர் அவர்களைச் சரியான வழியில் நடத்திச் செல்லாத வாய்ச்சொல்வீரர் அல்லர். காங்கிரஸ் போராட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டது முதல் அவர் இறந்து படுவதற்கு முன்வரை படேல் பேசியது கொஞ்சந்தான், ஆற்றிய செயல்களோ பல. படேலின் தோற்றமே அஞ்சாமையை நன்கு எடுத்துக் காட்டக் கூடியது. அவரது தளரா மனப்பான்மையும், கருமத்திலேயே கண்ணாக இருக்கும் குணமும், அமைப்பு முறைகளில் அவர் காட்டிய ஆர்வமும் கண்டிப்பும் அவர் 'எஃகு மனிதர்' தான் என்பதைப் புலப்படுத்தி விட்டன.

ஆங்காங்கே துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்த சுமார் 600 சமஸ்தானங்களைத் தமது ஒப்பற்ற மதி நுட்பத்தால் இந்திய அரசாங்கத்துடன் இணைக்கச் செய்த படேலின் அரிய செயல் யாராலும் என்றும் பாராட்டக் கூடியது



நிர்வாகத்தைத் திறம்பட நடத்தக் கூடியவர்கள் செய்யும் செயல்கள் யாவும் நன்மையாகவே இருக்கும் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. இதற்குப் படேலே ஒரு நல்ல எடுத்துக் காட்டு. இந்தியத் தொழிற் சங்க காங்கிரசில் கம்யூனிஸ்டு
கள் ஆதிக்கம் வலுத்து வரு
வதைக் காணச் சகியாத படேல்
அச் சங்கத்தின் கட்டுப்பாட்
டைக் குலைக்க இந்திய தேசிய
தொழிற் சங்க காங்கிரஸ்
என்ற பெயரில் ஒரு போட்டி
சங்கத்தை நிறுவித்தொழிலாளர்
களின் நீராப்பகையைத் தேடிக்
கொண்டார். மேலும் ஒன்று
பட்ட இந்தியாவாக இருக்க
வேண்டும் என்ற அவாவால்
மத்திய அரசாங்கத்திற்கு அள
வுக்கு மீறிய அதிகாரங்களையும்
மாகாணங்களுக்கு மிகக்குறை
வான அதிகாரங்களையும் தரும்
சட்டங்களை ஏற்படுத்தி
கொண்டார். இந்தியத் துணை
கண்டம் ஜனநாயக முறையில்
நாட்டங் கொள்ளாமல், ச
வாதிகாரப் போக்கில் போ
தற்கு இதுவே காரணமாகும்

உத்தமர்காந்தியாருக்குலட்சி
வாதியான நேருவும், கர்ம வீர
ரான படேலும் இரண்டு வார்
களாக அமைந்தனர். இவ
களில் படேலின் செயலாற்ற
திறமையினால்தான் சென்
மூன்றாண்டுகளாக இந்தி
ஆட்சி ஒழுங்காக நடைபெற்
வருகிறது இவரது ஒத்
ழைப்பு இல்லாமலிருந்தா
நேருவால் ஆட்சியை செவ்வனே
நடத்தி இருக்க முடியா
என்றுகூட கூறிவிடலாம்.

படேல் மறைவு காங்கிரசு
கும் இந்திய அரசாங்கத்திற்
ஈடு செய்ய முடியாத மாபெரு
இழப்பாகும். நமக்குபடேலிட
மாறுபட்ட கருத்திருந்தாலு
அவரது அஞ்சாமைக் குண
த்தையும் நிர்வாகத்திறமையை
போற்றாமல் இருக்க முடியா
நம்மைப் பொறுத்த அளவி
அவர் சர்வாதிகாரியாகக் காட்
யளித்தாலும், இந்தியாவிற்
அவர் செய்த தொண்டு அ
பரியது என்பதை நாம் ஒப்
கொள்ளத்தான் வேண்டும்.

—

# சேரன் சிரித்தான்!

"தில்லை அறிவழகன்"

செந்தாமரை:

"........பறிபோன தமிழன் மானத்தை மீட்கப் புறப்படுங்கள்......வாலிபர்களே.....வீரப் பெண்மணிகளே..........இந்த அறப்போரில் நீங்கள் ஈடுபட்டால்......அரசாங்கம் உங்கள் மீது அடக்குமுறையை வீசும்... நண்பர் பலர் இகழ்வர்......உற்றார் உறவினர் தூற்றுவர்...... கருத்து வேற்றுமையால் கணவன் மனைவியர் பிரிவர்....ஆனாலும் அச்சமின்றி முன் வாருங்கள்"

நேற்று அறிஞர் அண்ணா அவர்கள் பேசின இவ்வார்த்தைகள் அப்படியே என் நினைவில் நிற்காவிட்டாலும், அவர் சொன்ன கருத்துக்கள் கல்லின் மேல் எழுத்தென அப்படியே என் உள்ளத்தில் பதிந்திருக்கின்றன.

இன்றும் கூட நடைப்பிணமாக வாழ்வதை விடுத்து என்னைப் பெற்றெடுத்த பொன்னாட்டைத் திருத்தும் நற்பணியில் என் வாழ்நாட்களை வீண் செலவழிக்கக் கூடாது என்றுதான் நினைக்கிறேன்.

ஆனால் வெந்துபோன என் உள்ளம், சுக்கு நூறாகிய என் மனம் இதனால் சாந்தியடையுமா என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

ஆனால் இந்த நிலைக்கெல்லாம் காரணம் இதே அண்ணாவின் பேச்சுதான்.

அன்று பள்ளி மண்டபம் மாணவ மணிகளால் நிரம்பியிருந்தது. பெருத்த கைதட்டலிடையே—தமிழ்நாட்டுப் பெர்னாட்ஷா—அண்ணா பேசினார்.

"......இளங்கோ காவியுடையணிந்து காட்டிற்குப் போய்விடவில்லை. அவர் அடிகளானார்.. அருமை சிலப்பதிகாரம் தந்தார்......ஆகவேதான் காவியுடையணிவோரைப் பொதுவாக வெறுக்கிற நாங்கள் இளங்கோவை மட்டும் பாராட்டுகிறோம்....."

அந்தத் தேனருவி போன்ற அமுத மொழிகளில் நான் மயங்கியே போனேன். அவருடைய அந்த இனிய வீர சொற்களை இன்றும் என்னால் மறக்கமுடியவில்லை—என்றும் மறக்கமுடியாது. அன்று என் மனத்தில் கொளுத்தப்பட்ட அறிவுத் தீ இன்றும் அவியவில்லை—என்றும் அவியாது. அண்ணா சொன்ன அந்த இலட்சியங்களை எத்தகைய எதிர்ப்பு நேரிடினும் சரி, விட்டுக் கொடுக்க என் மனம் தயங்குகிறது. தயங்கினதனாலேதான் இந்த நிலையும் எனக்கு ஏற்பட்டது. என் உள்ளமும் எரிமலையாகியது.

கதைகளிலே படித்திருக்கிறேன் எத்தனையோ வித கணவன் மனைவி தகராறுகளை; அந்தத் தகராறுகளைத் தீர்த்துவைக்கும் கதாசிரியர்களின் அபூர்வ சக்தியையும் கண்டிருக்கிறேன். ஒரு நல்ல கதாசிரியர்க்கு என் 'நிலைமையை' எடுத்தெழுதி அதற்குப் பரிகாரம் என்ன சொல்கிறீர்கள் என்று கூடக் கேட்கலாமாவெனப் பலமுறை நினைத்திருக்கிறேன்.

* * *

**"நாய் சாதுவான பிராணிதான். எஜமானின் மடியில் கூட ஏறிக் கொஞ்சலாம். ஆனால் அதற்கு வெறி பிடித்துவிட்டால் அடித்து வீட்டை விட்டு விரட்டாமல் என்ன செய்வது?"**

அப்பப்ப! அன்று கணவன் சொன்ன இந்த வார்த்தைகளை இப்பொழுது நினைத்துப் பார்த்தால் கூட என் உள்ளம் வெதும்பி வேதனையால் வாடுகிறது.

இது என் பிழையாகக்கூட இருக்கலாம். "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்று நினைக்கும் வைதீகப் பெண் இந்தக் கொடுஞ் சொற்களைக்கூடப் பொருத்துக் கொண்டு வாழ்ந்திருப்பாள்.

கணவன் எப்படி இருக்க வேண்டும் என்று நான் நினைத்தேன்? எதிர் பார்த்தேன்? 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே' என்ற சொற்களின் உருவகமாக வல்லவா வாழ்வோம் என்று நான் ஆசைக் கோட்டைகள் பல கட்டினேன்! ஆனால், இன்று, அந்தோ, அந்தக் கோட்டைகள் எல்லாம் சடசடவெனச் சரிந்து வீழ்ந்து மண்ணோடு மண்ணாக வல்லவா மறைந்து போய்விட்டன! இவையெல்லாம் போகிறதென்றாலும் என்மனத்தில் அறிவியக்கம் பதித்திருக்கிறதே அந்தத் தன்மான உணர்ச்சி—உயிர் வாழ்வதற்காக — மானத்தை இழக்க உடன்பட மறுக்கிறதே.

அவர் மனத்தில் அந்த நேரத்தில் கிடைத்த சர்வ சாதாரணமான வார்த்தைகளாகக் கூட அவைகள் இருக்கலாம். ஆனால் என்னை அந்த வார்த்தைகள் வெறிபிடித்த நாயைவிடக் கொடூரமாகவல்லவா கடித்துவிட்டன.

நான், நாயாம்! அவரின் மனைவி—வாழ்க்கைத் துணைவி—நாயாம்! வெறிபிடித்துவிட்டதாம்! வீட்டை விட்டு விரட்ட வேண்டுமாம்!

என்னைக் கேவலம் ஒரு நாயைப்போலவீட்டைப் பாதுகாக்

கத்தான் புக்ககத்திற்கு அழைத்தார்கள் போலும். வாழ்க்கைத் துணைவி என்று கூறுவது கூட கணவனின் வாழ்க்கையையும், அவன் குழந்தைகளையும் பேணி வளர்க்கும் தாய் என்ற அர்த்தத்தில்தான் போலும்.

சே! சே! என்ன அர்த்தமற்ற சொற்கள்! "வெறிபிடித்த நாயை அடித்துக் கொன்றுவிடுவார்கள்! ஆனால் உன்னை நான் உதைத்துக் கொல்லாமல், மன்னித்து, வீட்டைவிட்டு அனுப்புகிறேன்"

என்ன நெஞ்சழுத்தம்!

'உன் செயல் பிடிக்கவில்லை. வீட்டைவிட்டு நட' என்று ஒரு வார்த்தையில் சொல்லியனுப்பியிருக்கக் கூடாதா?

கருந்தேள் கொட்டி துடித்திடும் நிலையில் என் உள்ளத்தை ஏன் ஆக்க வேண்டும்? அப்படித்தான் நான் என்ன குற்றம் செய்தேன்? அண்ணன் வீரமணி நேற்று கூட, "செந்தாமரை! நீ நாள் முழுவதும் அழுவதும், நான் வந்ததும் சிரிப்பது போலப் பாசாங்கு செய்வதும் கூடாது. உண்டு, இல்லை என்று கூறிவிடு. நாளையே அவனின் தொடர்பை நீதி மன்றத்தின் மூலமாக அறுத்துவிடுவோம்" என்று கூறினான்.

ஆனால் என் திருமணம் என்னுடைய மனமொப்ப மில்லாமல் நடந்ததா?

திருமணம் நடந்தபோது அப்பா கூட உயிரோடுதான் இருந்தார்கள். எத்தனையோ பேரை எனக்குக் கணவனாகத் தகுதியுடையவனா என்றுதான் பார்த்தார்கள்.

அத்தனை பேர்களிலும் அண்ணன் வீரமணி, கல்லூரியில் ஆசிரியாகவிருந்த ஒரு இளைஞரைத் தேர்ந்தெடுத்தார். அண்ணன் தேர்ந்தெடுத்தால் கேட்க வேண்டுமா? அவர் நல்ல சீர்திருத்தக்காரர். புரட்சி மனப்பான்மை கொண்டவர்.

இந்தச் செய்தியை அண்ணன் சென்ன அன்று அப்பா மதுரை சென்றிருந்தார். மறுநாள் அப்பா வீடுதிரும்பியபோது தன்னோடு ஒரு குடும்பத்தை அழைத்து வந்திருந்தார். 'பெண் பார்க்க வந்திருக்கிறார்கள். மாப்பிள்ளை: ஜெயபாலன் பி. எஸ்ஸி.' என்றார்கள். உடனே முடிவு சொல்வது, வேண்டுமென்றே அண்ணனால் நிறுத்தப்பட்டது காரணம் கல்லூரி ஆசிரியரின் முடிவான பதிலைத் தெரிந்துகொள்ளத்தான். மறுநாள் அந்த ஆசிரிய இளைஞரைச் சென்று கேட்டபோது, ஜெயபாலன் தன் நண்பரென்றும், அவர் நேற்று தன்னை சந்தித்து, உங்கள் தங்கையைத்திருமணம் செய்துகொள்ள முடிவு செய்திருப்பதாகக் கூறினதால் இதில் தான் தலையிடமுடியாதென்று மறுத்துவிட்டார். ஆகவே 'ஜெயபாலன்—செந்தாமரை,' கல்யாணம், அம்மி மிதிக்க, அருந்ததி பார்க்க, புரோகிதர் மந்திரம் உச்சரிக்க, சுப லக்கனம் கூடிய மங்கள தினத்தில், ஆன்றோர்களால் நிச்சயிக்கப்பட்டு முகூர்த்த வேளை தவறாமல் நடைபெற வேண்டியதாயிற்று.

"பையன் பி. எஸ்ஸி படித்தவர்! அவர் அப்பாவும் அம்மாவும் வைதீகமாம்! அதனால் உனக்கென்ன?" என்று கூறினார் அப்பா.

எப்படியோ ஒப்புக்கொண்டு விட்டோம். என்ன குணமோ, என்ன கொள்கையோ, யார் கண்டார்கள் என்ற நினைவோடுதான் புக்ககம் புகுந்தேன

வைதீக முறைப்படி வரவேற்பு இருந்தது. அதனால் என்ன? அவையெல்லாம் வெறும் சடங்குகள் தானே? அவைகளே வாழ்க்கையில்லையல்லவா? இப்படியெல்லாம் எண்ணிமன ஆறுதல்பெற்றேன்.

ஆனால் லாகூரிலிருந்து அனுப்
பப்படுகிற அபூர்வ 'வாட்ச்
களின் இலட்சணம் அதை வாங்
கியபின்தானே தெரிகிறது. அத
போன்றுதான் என் மணவாழ்க்
கையின் இலட்சணமும் அதில்
புகுந்தபின்தான் தெரிந்தது.

நான் அப்படி ஒன்றும்
பெரும் புரட்சி மனப்பான்மை
கொண்டவளல்ல. மாமி அவர்கள்
இருபத்தி நாலு மணி நேரமும்
கடவுள் தியானத்தில் இருப்ப
எனக்கொன்றும் தீமையில்லை

அதையெல்லாம் அவர்க
என்மேல் திணிக்கக் கூடா
என்பதுதான் என்னுடைய
சிறிய ஆசை. விடிய
காலையில் எழுந்து ஆற்றி
முழுகி, பிள்ளையார் சிலையை
துடைத்து எண்ணெய் ஊற்றி
படைப்பதிலிருந்து, சாப்பி
வது, நடப்பது, உட்காருவது
அத்தனையிலும் வைதீகமாய்
தான் நான் வாழவேண்டுமெ
பது கணவனின் கட்டளை. கா
ணம் பி. எஸ்ஸி பாஸ் செய்
இந்த வேலை பார்க்கிறவரையி
அவர் பெற்ற வெற்றிக்கெ
லாம், ஒரே காரணம் வைதீ
சடங்குகளை அவர் சரிவ
செய்து வந்தது தானாம்!

அண்ணனோ என் கல்யா
சடங்குகளிலெல்லாம் கலந்
கொள்ளவேயில்லை. இ
அறிந்த மாமியார், 'அவன் த
கைதானே இவள்' என்று கூ
குத்திக் குத்திக் காட்டுவதன்
வேறொன்றறியேன் பராபர
என்றார்கள். ஒரு நாள் நெற்
யில் பொட்டு வைக்காமல் சா
பிட உட்கார்ந்து விட்டே
அன்று முழுதும், போத
போதும் என்றாகிவிட்ட
"உன் சுயமரியாதையையல்லா
உன் அப்பன் வீட்டிலேயே
சுக்கடி. இங்கே அந்த வ
யெல்லாம் நீட்டாதேடி" என்
றூறு தடவைக்கு மேல் மா
யார் கூறிவிட்டார்கள் அன்

அது, அதோடு நின்றுவிட்டதா என்ன?

**ஜெயபாலன் :**

அவளை அப்படி விரட்டியடித்திருக்கக் கூடாதுதான். ஆனாலும் அவள் அப்படி நடந்திருக்கலாமா? இன்று வரையில் நான் கூட அப்பாவை எதிர்த்து ஒரு வார்த்தை பேசவதில்லை. இவள் நீதி, நியாயம், என்று அப்பாவிடமே பேச ஆரம்பித்து விட்டாளே, அப்பா மனம் எவ்வளவு புண்பட்டிருக்கும்?

இவள் அண்ணன் வீரமணி தான் இப்படி ஊர்சுற்றி உதவாக்கரைப் பிரசாரம் செய்கிறானென்றால், இவளுக்கும் அதே திமிர். 'இவன் என்ன செய்து விடமுடியும்?' என்ற எண்ணம்.

அம்மாவிடம் நாள் முழுதும் வம்பு. "மாமி எதிரே நான் ஏன் கால்வலிக்க நிற்கவேண்டும்? அவர்கள் என்ன, மகாராணி, நான் என்ன வேலைக்காரி?" என்கிறாள்.

"பெண்ணினத்தை ஊமை, ஊமை என்றுரைக்கும் மட்டும், உள்ளடங்கும் ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு" என்று நான் நாள்தோறும் பக்தியோடு பயிலும் பகவத கீதையில் எழுதிவைக்கிறாள்.

'எதிர்த்துப் பேசாதே' என்று நான் அவளை 'ஊமை' யாக்குகிறேனாம்! நான், என் தாய் தந்தையர் சொற்படி நடப்பது உள்ளடங்கும் 'ஆமை' நிலையாம்.

"என்னப்பா பகவத்கீதையில் புரட்சிக்கீதம்?......இது என்ன உன் எழுத்தாகவும் தெரியவில்லை....உன் துணைவி...." என்று, வந்த நண்பன், இழுத்த போதுதான், திடுக்கிட்டு நான் அதை வாங்கிப் பார்த்தேன்' நண்பன் கேலியாக சிரித்தான். அப்பொழுது என் சுயமரியாதையெல்லாம் காற்றில் பறந்தே அதற்கு இவள் என்ன சொல்கிறாள்?

சீர்திருத்தமாம் சீர்திருத்தம்! உண்மை நிலையைக் கொஞ்சமாவது உணர்ந்து நடக்கிறாளா?

சென்னையிலிருக்கும் என் அண்ணி இன்னும் அம்மா எதிரே உட்கார்ந்து ஒரு வார்த்தை பேசினதில்லை. இவள் என்னவென்றால் பக்கத்து வீட்டுப் பெண்களிடமெல்லாம், "மாமியார் எதிரே உட்கார்ந்தால் என்ன?......மருமகளுக்கு நிற்பதற்கே காலையும்......மாமியார்க்கு நீட்டிப்போட்டுப் படுக்கவே தான்முதுகையும் கொடுத்திருக்கிறார்களா?......அதெல்லாம் அந்தக் காலம்.......இப்பொழுது நடக்காது......" என்று 'லெக்சர்' பண்ணுகிறாளாம். இதனால் என் தாயின் மானம் மாத்திரமா பறந்தது? அடுத்தவீட்டு சர்க்கா சங்கம் காரியதரிசி சங்கரலிங்கமய்யர், "இருந்தாலும், இப்படிப்பட்ட சர்வாதி—காரி—யை—நீ கட்டியிருக்கக் கூடாது" என்று கூறியபோது என் மானமும் சேர்ந்தல்லவா பறந்தது.

இளித்துக்கொண்டு என் நண்பர்களோடு அவள் பேசுவது என் குடும்ப கௌரவத்தையே அல்லவா கெடுக்கிறது.

அவள் சொன்னாள்,

"மாமா, மகாபாரதம் படிக்கச் சொல்லி என் உயிரை வாங்குகிறார்களே, அவர்கள் கண்கள் கெட்டிருந்தால் அது வரும்படி தவமிருக்கட்டுமே! சிறையிலிருந்து வெளியே வருகிறவனைப் பாதாளக்குகையில் அடைக்கிற மாதிரி, மாமியின் அடக்குமுறையிலிருந்து தப்பித்து வெளியே வந்து ஏதாவது நல்லகதை கட்டுரைகளாகப்படிப்போமென்றால், மகாபாரதம் படிக்கச் சொல்லி இவர்கள் போகிற உலகத்திற்குப் புண்ணியம் சேர்க்கிறார்களாக்கும்."

கோபத்தை அடக்கிப் பார்த்தேன். என்றாலும் பொறுக்க முடியவில்லை.

வேகமாக ஒரு அறைவிட்டேன். கழுத்தைப் பிடித்துத் தெருவில் கொண்டுபோய்த் தள்ளினேன். நன்றாக, என்மனதார அவளையும், அவளைக் கெடுத்த அந்தக் கொள்கைகளையும்திட்டினேன். அவள் தொலைந்ததே நல்லதாயிற்று!

**வீரமணி :**

நல்லதாயிற்று! அந்தக் 'பேவன' ஒழிந்ததும் நல்லதாயிற்று! அந்த வைதீகப் பிடிவாதக்காரனை நீ கல்யாணம் செய்துகொண்டதே பிசகு.

B Sc படித்திருக்கின்றானாம்! மூளையைப் பார் மூளையை! 'வெறிநாய்' என்றுடன்னைச்சொன்னானென்றால் அது என்னைச் சொன்னதாக அர்த்தம். வருஷம் ஐந்தாகிவிட்டதே என்பதற்காக நான் மறந்துவிடமுடியாது. அவன் தப்பென்று நினைத்தால் இங்கே வரட்டும்.

உனக்காக நான் அப்பொழுது அவன் வீட்டிற்குச் சென்று கெஞ்சியது போதும்.

'வெறிநாயின் அண்ணனென்றான்' என்னை!

'அப்படி உங்களையும் சொன்னானா அண்ணா?' என்று [illegible]ட்டு அவள் கேட்டாள்.


வளவனூர் (தெ ஆ)

தி. மு. க.
பொதுக் கூட்டம்

★

31—12—50 ஞாயிறு
மாலை 5-30 மணி

☆

பேச்சாளர் :
மா. இளஞ்செழியன், B. A. Hons.

ஆம் செந்தாமரை! அதுமாத்திரமல்ல. கடவுள் இல்லை என்று பேசுகிறேனாம். இந்தி எதிர்ப்பில் சிறை சென்றேனாம். அவன் சொந்தக்காரர்கள், இந்தக்கயவனின் தங்கையை நீயும் கல்யாணம் செய்து கொண்டாயே என்று கேலி செய்கிறார்களாம். பொறுக்க முடியவில்லையாம்.

எனக்கு வருகிற இந்தப்பணத்தைக் கொண்டு நீ வாழலாம். நீ அவன் வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்றால் எனக்கு எந்த விதத்தடையும் இல்லை. தடையும் இருக்கமுடியாது அது உன்னுடைய உரிமை. எனக்கு மகிழ்ச்சி தருவதுங்கூட. ஆனால் நானாக அவன் வீட்டில் இனி காலெடுத்து வைக்க முடியாது என்பது மாத்திரமல்ல உனக்கு அது இடைஞ்சலும் கூட.

நீ சென்ற சில மாதங்களாக, நாட்டின் நாலாபக்கங்களிலும் சென்று தமிழ் நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபடுவது எனக்கு இணையிலா மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகிறது.

அவனை முற்றும் வெறுத்து நீக்க நீ நினைத்தால் நீதிமன்றம் இருக்கவே இருக்கிறது.

**செங்குட்டுவன் :**

அப்பப்பா! ஆண்டு ஆறு உருண்டு விட்டனவே. நான் கண்டாகப்பெற்றோரையும் வெறுத்து வந்துவிட்டேன். வாழ்க்கையிலே என்னென்ன மாற்றங்கள்?

அன்று, "பங்கசம் என்றழைக்காமல், செந்தாமரை என்றழையுங்கள்" என்று கூறியதற்காக அவளைத் திட்டினேன். ஆனால் இந்த இரண்டாண்டாக, 'செந்தாமரை 'செந்தாமரை என்று எத்தனைமுறை கூறிவிட்டேன்.

அன்று எப்படித்தான் என் மனதிலிருந்து 'வெறிநாய்' என்ற வார்த்தை வெளிவந்ததோ தெரியவில்லை. செந்தாமரை சொன்ன, வீரமணி கூறிய அந்த அருங் கொள்கைகளை அன்றே உணர மறுத்தேனே! என்ன மதியீனம்? என்னருமை மனைவியை —தமிழகத்துக் கண்மணியை— வெறுத்துத் தள்ளிய கயவனானேன்.

ஐயகோ! நேற்று அந்தக் கூட்டத்திற்குச் செல்லாமலிருந்தால் என் மனம் இப்படி புழுங்கிச் சாகாதல்லவா?

என் மனைவி செந்தாமரையின் நாட்டின் நலிவைப் போக்கும் தேன் மொழிச்சொற்கள், அக்கூட்டத்திலிருந்த அத்தனை பேரின் சிந்தை குளிரும் சொற்களாகவன்றோ இருந்தன? எப்படித்தான் அன்று இந்த அரும் சொற்களைக் கொடும் சொற்கள் என்று கருதினேனோ?

'வெறி நாய்' என்று சொல்லிய நான் அந்தத் தமிழ் நங்கை எதிரே எப்படிச் செல்வது? எதைச் சொல்வது?

வெறிநாய்! அந்தோ, என்ன கொடும் சொல்! அவளை மாத்திரமா? அவள் அண்ணனையும்! அது மாத்திரமா? தமிழகத்தின் இலட்சியத்தையுமேயல்லவா குறைகூறியிருக்கிறேன்.

ஐயோ! என் இதயம் வெடித்துவிடும் போலிருக்கிறதே! அன்று மகிழ்ச்சி தந்த அதே சொல் இத்தனை வேதனையும் தரவேண்டுமா?

ஆம்! வேதனை தர வேண்டியதுதான்! என் குற்றத்திற்காக நான் சித்திரவதை செய்யப்பட வேண்டியதுதான்!

நான் உயிர் வாழவே தகுதியற்றவன்! 'தற்கொலை'! அது ஒன்றுதான் எனக்குச் சாந்தியளிக்கும். ஆனால் நாளை பத்திரிகை "செந்தாமரையின் கணவன் தற்கொலை" என்றல்லவா சித்தரிக்கும்?

அந்தப்பழிச்சொல், தமிழ்நங்கைக்குக் கூடாது. "தமிழகத்தின் இலட்சியத்திற்காகச் சாகவேண்டும், அதுவும் செந்தாமரை மகிழச் சாகவேண்டும்" இந்தக் கடைசி உயிர்ச் சொற்களை உரத்தகுரலில் கூறினேன்.

"திராவிட நாடு திராவிடருக்கே"

"வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழிக"

"ஆச்சாரியாரே திரும்பிப்போம்"

என்ற முழக்கம் என் காதில் கேட்டது. எட்டிப் பார்த்தேன், நான் இருந்த உயர்ந்த மாடி அறையிலிருந்து.

பெண்களும் ஆண்களும் முழக்கம் செய்துகொண்டு செல்வதைக் கண்டேன். ஜன்னல் திரையாகத் தொங்கிய கருப்புத் துணி, 'கருங்கொடி'யாயிற்று. கையில் ஏந்தினேன். வீரரோடு வீரராக நடந்தேன். சென்னை 'கோட்டை' தெருக்களில் நின்ற வீரர்களோடு நானும் நின்றேன்.

போலீஸ் புலிகள் திடீரென்று புகுந்து தாக்கினர். என் கொடியைப் பிடுங்கி யெறிந்தனர்.

எதிரே ஒரு பெண் போலீஸாரின் தடியடி பொறுக்கமாட்டாமல் கீழே வீழ்வதைக் கண்டேன். ஓடோடிச்சென்று தூக்கினேன். அவள், என் செந்தாமரை!

மென்மலரைக் கையிலேந்திக் கொண்டு செல்பவன் போல அவளை என் அறைக்குத் தூக்கிச் சென்றேன். அவள் விழித்துப் பார்த்தாள்.

"பங்கஜம்!....இல்லை.. ..செந்தாமரை...மன்னிக்க முடியாத குற்றம் செய்த என்னை மன்னிப்பாயா?........ஜெயபாலனாக இருக்கும் போது செய்த பிழையைச் செங்குட்டுவனான இன்றுவது மன்னிப்பாயா?"

"செந்தாமரை, செங்குட்டுவனை மன்னிக்க முடியாது, கனக விஜயர் தலைமையில் கல்லேற்றிற வரையில்."

"இதோபார், கனக விஜயனை எதிர்த்துக் கருப்புக் கொடி பிடித்ததால் ஏற்பட்ட தழும்புகள்"

"செங்குட்டுவா! நீ என்னை விரட்டாமலிருந்தால் மற்ற தமிழ்ப்பெண்களைப் போலவே நானும் ஜன சந்ததியைத்தானே பெருக்கி, வீட்டில் சும்மா உட்கார்ந்திருப்பேன். தமிழகத்துக்குச் செய்யவேண்டிய அரும் பணியை உன்னால்தான் செய்தேன்..."

"செந்தாமரை!...செங்குட்டுவா என்ற சொல்லை உன் மதுர மொழிகள் சொல்ல நான் கேட்கவேண்டுமென்று எவ்வளவு நாள் காத்திருந்தேன் தெரியுமா?"..............................................

'இருவரும் ஒருமனதாயினர் தோழி' என்று யாரோ இசைப்பதைக் கேட்டேன்.

**கந்தசாமியார்:**

உலகம் சுற்றிக்கொண்டுதான் இருக்கின்றது. அதுபோலக் கொள்கைகளும் மாறிக்கொண்டுதான் இருக்கின்றன. அந்த மாற்றத்தை நாம் அன்றே உணராமலிருந்தது என்ன முட்டாள்தனம்.

ஜெயபாலன் என் பிள்ளையாய்ப் பிறந்துதான் என்ன பயன்? ஐந்தாண்டாகவல்லவா அவன் எட்டிப் பார்க்காமலே இருக்கிறான். இப்பொழுது அவனைக் குறைகூறி என்ன செய்வது?... இந்த 'அண்ணாதுரையின்' பேச்சை அன்றே நான் கேட்டிருந்தால் இவ்வளவு தொல்லை ஏற்பட்டிருக்காதல்லவா?...இப்பொழுது வீட்டையே 'பகுத்தறிவுமன்றம்' ஆக்கி, 'அண்ணா புத்தகசாலை' நடத்துகிறேன்...இதையெல்லாம் ஜெயபாலனுக்கு எழுதினால்...ஒரு சமயம் திரும்பி வரலாம்...இப்படிப் பேசிக்கொண்டிருந்தேன் அன்று வந்த பகுத்தறிவுமன்ற நண்பர்களோடு.

தெருவிலே ஒரு வண்டி செல்லும் சத்தம் கேட்டது. ஜெயபாலன் உள்ளே திடீரென்று வந்தான். 'வா ஜெயபாலா' என்று ஆனந்தம் பொங்கக் கூறினேன். "இல்லை! நான் செங்குட்டுவன்!" என்றான். "செங்குட்டுவா! அருமை செந்தாமரையை விரட்டினதற்கு நீ தந்த தண்டனை போதுமடா. இனிமேல் ஒரு வினாடியும் எங்களை விட்டுப் பிரியக்கூடாது" என்று சொல்லி அவனை அவன் தாய் அணைத்துக் கொண்டபோது, அவன், "அம்மா, செந்தாமரை மாத்திரமல்ல இதோ, உன்பேரனும்..." என்று பேச்சை முடிக்குமுன்னே செந்தாமரை உள்ளே வந்தாள். ஒருவராலும் ஒன்றும் பேச முடியவில்லை. அப்போது என்னருமைப் பேரன் சேரன் சிரித்தான்! அந்த மோகனச்சிரிப்பில் மயங்கிப் போன நாங்கள், அதுவரை பட்ட துயரங்கள் அவ்வளவையும் மறந்தே போய் விட்டோம்!

---

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

தெய்வத்தன்மை வாய்ந்தனவென்று பேசப்படும் கோட்பாடுகளும் சுத்தப் பொய் என்பதும், அவைகள் இதுகள் போன்ற (பிராமணர்களையும் ஆலவாயரையும் சுட்டிக்காட்டி) சிலதுகளின் வயிற்றுப் பிழைப்புக்கு ஆதாரமாக இருக்க உண்டாக்கப்பட்ட கற்பனைக் களஞ்சியங்கள் என்பதையும் மக்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டனர். ஆகவேதான் அவர்கள் சமயம் விட்டு சமயம் சென்று விடுகின்றனர். அரசே இவைகள்தான் என் மறுப்புரைகள்... நான் சொன்னவைகளில் தவறு இருப்பின் தண்டிக்கலாம்!

ஆல: ஏ ராஜன்! மனு சாஸ்திரப்படி ஸ்ருதி—ஸ்மிருத்தியிலாவது, வேதம்—தர்ம சாஸ்திரம் இவ்விரண்டையும் தர்க்க யுக்தி கொண்டு மறுப்பவன் மாபாதகன்—நாஸ்திகனாவான். நாஸ்திகன் வேதத்தை நிந்தித்தால் தெய்வத்தை நிந்தித்தவனாகிறான். நாஸ்திகனை நல்லோரனைவரும் புறக்கணிக்க வேண்டுவதல்லாமல் தகுந்த தண்டனையும் தரவேண்டும். தனமில்லாமல் வருந்துகிற பிராமணனுத் தமர்கள் தகாதவர்களுக்கு ஏதாவது ஓதுவித்துக்கொண்டு, பொருள் சம்பாதிப்பதால் தோஷமே கிடையாது. பிராமணர் நீர்—நெருப்பு இவைகளைப் போன்று பரிசுத்த முடையவர். ஆகவே அப்பேர்ப்பட்டவர்களை அவமானம் செய்த இவனை தாராளமாக தண்டிக்கலாம்

முகில்: (கேலிச் சிரிப்பு) குருதேவா...தண்டனையா......! அருணனுக்கா......? தயைகூர்ந்து என்னை மன்னிக்கவும். இந்த ஆட்சி மக்களின் நலனுக்காகவே ஏற்பட்டுள்ளது. மக்களின் தீர்ப்பு என்ன என்பதை நாம் விசாரணையின் ஆரம்பத்திலேயே அறிந்து கொண்டோம். அருணன் தண்டனைக்குரியவனல்லன் தகுந்த பரிசு பெற யோக்யதை உடையவன்....தமிழ் வீரனே....மெச்சினேன் உன்னை—உன் அறிவுப்பேச்சுகளை! உன் அறிவு வளர்க—உன் கொள்கை வளர்க! நீ குற்றமற்றவன். வீணாக உம்மீது குற்றம் சுமத்திய இவர்களே குற்றவாளிகள். இருப்பினும் அவர்களை இம்முறை மன்னிக்கின்றேன் நமது மேன்மை தங்கிய ராஜகுருவுக்காக. இனி சபை கலையலாம்.

[அரசன் எழுந்திருக்கவே, எல்லோரும் எழுந்து மரியாதை செய்கின்றனர். பின்பு கலைகின்றனர். ஆலவாயரின் முகம் தணலைப்போல் ஆகிவிடுகின்றது. அருணன் பொது மக்கள் புடைசூழ வீரமுடன் விசாரணைக் கூடத்தை விட்டுச் செல்கிறான்.]

ஆல: (தனிப் பேச்சு) அறிவிலிகள்........அயோக்கியர்கள்!

(தொடரும்)

# சந்திராவின் வெற்றி

"முருகு"

"ஆம்! பெண்களே இப்படித்தான்...பல நாட்கள் பழகிய தோழியாக இருந்தாலுங் கூட மனதில் மறைத்து வைத்திருக்கின்ற சில அந்தரங்கவிஷயங்களைக் கொஞ்சத்தில் கூறுவதில்லை! என்ன சந்திரா? நான் இத்தனை நேரமாகக் கேட்கிறேன். நீ சொல்ல மாட்டாயா உன் மனத்தில் உள்ளதை" என்று சலிப்போடு என்னைக் கேட்டாள் நளினி.

"நளினி, இதற்குள் ஏனடி பொறுமையை இழந்து விடுகிறாய், நான் தான் கூறுகிறேன் என்கிறேனே. ஆனால் நீ உன் மணவாழ்வைப் பற்றிக் கூறினால் தான் நான் பின்னர் கூறுவேன்...... என்ன...?" என்று இழுத்தேன் நான்.

"உம்! எனக்கு மணம் என்னவோ ஒன்றும் புதிய முறையில் நடந்து விடவில்லை. நீ கூறினாயே 'காதல் மணம்' என்று! அது போல் ஒன்றும் இல்லை! நான் என்னை மணக்க வந்த மாப்பிள்ளையை மணப் பந்தலுக்கு வரும் பொழுது தான் பார்த்தேன். அவ்வளவு உரிமை என் பெற்றோர்கள் எனக்களித்திருந்தார்கள்......! உலகமே இப்படித்தான் சந்திரா... பாரேன்...வீடு கட்டுகிறார்கள். ஆனால் கட்டி முடிவுற்ற பின்னர் இவர் தான் இங்கு குடியேற வேண்டுமென்பதில்லை! வீடு பிடித்திருந்தால் எவனும் குடியேறி விடுகிறான். ஆனால் குடி வர இருப்பவனை வீடு தடுப்பது கிடையாது! நீ வேண்டாம் — அவர் வரட்டும் என்று இயம்புவதில்லை, அதனால் முடியாது. பாரடி...பெண்களும் இப்படித் தான். பருவமடைந்தவுடன் கட்டிமுடிந்த வீடாகின்றார்கள். ஆனால் இவர் தான் இங்குக் குடியேற வேண்டுமென்று கூற இன்னும் இந்த சமூகம் நமக்கு இடம் கொடுக்க இல்லை!

"ரோஜா மலர் முள் நிறைந்த செடியில் தோன்றினாலுங் கூட, அது பூக்கு மட்டும் காத்திருந்து, பூத்தவுடன் யாராகிலும் கொய்து விடுகிறார்கள். ஆனால் 'கொய்யாதே' என்று கூற செடிக்குக் கூட உரிமை இல்லாததைப் போல் இருந்து விடுகிறது அந்த மலரை முந்தி கொய்தாலுங் கூட, வேண்டாம் என்று கூற மலரால் முடிவதில்லை...இந்த பூவைப் போல்தான் பெண்களின் வாழ்க்கையும் ஆகி விட்டிருக்கிறது .", என்று கூறிக் கொண்டே போனாள்.

என் மனதில் உள்ளதுபோலவே, என் பள்ளித் தோழி நளினியின் உள்ளத்திலே கூட பல எண்ணச் சுவடிகள் புதைந்து கிடக்கின்றன என்று அவள் கூற ஆரம்பித்திருந்தே தெரிந்து கொண்டேன். அவற்றை அறிய ஆவல் உண்டாயிற்று! நாங்கள் ஆர்பூரில் இருந்த பொழுது ஒரே பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தோம்! அவள் பருவமடைந்தவுடன் பள்ளிக்கு வருவதை நிறுத்திக் கொண்டாள். நாங்கள் அப்பொழுது ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தோம். நான் அவள் வீட்டிற்கு அவ்வப்பொழுது சென்று வருவேன்.

பின்னர் நான் ஆறாம் படிவத்தை முடித்தவுடன், மருத்துவம் பயில சென்னை வந்து விட்டேன். அன்று பிரிந்தவள், சில நாட்களுக்கு முன்னர்தான் நளினியைச் சந்தித்தேன். அவளுக்கு இப்பொழுது ஒரு குழந்தை இருக்கிறதாம். அடையாளமே மாறிப்போய் இருக்கிறாள். ஆனால் அந்த அன்பு உள்ளம்-ஆம்! தாமரை இலையின் மீது நீரைத் தெளித்தால் ஒட்டாமல் உருள்கிறதே முத்தைப் போல — அது போலத் தான், பல இன்ப துன்பங்களை அவள் வாழ்வில் அடைந்திருந்தும், அதே அன்பு உள்ளம், அந்தப் பழைய பச்சையுள்ளம், அது தான் குழந்தை உள்ளம், அவளிடமிருக்கிறது. இன்று அவளை கட்டாயம் எங்கள் வீட்டிற்கு வரச் சொல்லி இருந்தேன். அவளும், அவளுடைய குழந்தை குமுதமும் வந்தார்கள். என் கணவர் கூட அப்பொழுது வீட்டிலில்லை. வர நேரமாகுமென்று கூறி விட்டுப் போயிருந்தார்.

நாங்கள் வெகு நேரம், எங்கள் பிரிவிற்குப் பின்னர் நடந்த சம்பவங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம். கடைசிக் கட்டம்- அது தான் திருமணத்தைப் பற்றிப் பேசிய கட்டம் - அந்த இன்பத் தென்றல் வீசும் இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அப்பொழுது தான் நளினி - மேலே தீட்டியது போல தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

நான் கேட்டேன், "நளினி ஏன் நீ வாழ்வையே வெறுத்துப் பேசுகிறாய். சமூகம் விடுவதில்லை என்கிறாயே. இந்த சமூகம் எப்பொழுது தான் விட்டிருக்கிறது. நாம் தான் சமூக கட்டுப்பாட்டை மீற வேண்டும். சமூகம் ஒரு வாளைப் போன்றது! அது வீரனிடத்தில் இருக்கும் பொழுது எதிரி சாய்ந்து விடுகின்றான். கோழையின் கரத்திலே தவழ்ந்தால் அந்த வாளுடனேயே கோழையும் மடிகின்றான்! வாளும் பெருமையற்றுப் போய் விடுகிறது. எனவே தான் நளினி சமூக விடுதலைக்காக போராடுபவர்கள் யாராக இருப்பினும் சரி கட்டுப்பாடுகளை தாண்டிச் செல்ல வேண்டும். சமூகத்திற்கு அஞ்சக் கூடாது. அஞ்சினால் அவன் மடையனாகத் தான் கருதப்படுவான்," என்றேன் நான்.

"சந்திரா, நான் எப்படி முதலில் என் வாழ்வில் வீழ்ச்சியைக் கண்டேனோ, அது போல நீ வெற்றியைக் கண்டிருக்கிறாய் போலிருக்கிறது! அது தான் இப்படிப் பேசுகிறாய். உன்னைப் போன்ற திடமான மனம் முன்பு எனக்கிருந்திருப்பின் நானும் உன்னைப் போல் தான் கட்டுப்பாட்டிலிருந்து வெளி

விளம்பி இருப்பேன். ஆனால் அன்று என் பெற்றோர்களால் அடக்கப்பட்டு விட்டேன்.

ஆம்! உனக்குத் தெரியும்; நாம் பல ஆண்டுகள் பழகியவர்கள், என் மனத்தில் உள்ளதை மறைத்தே நான் வைப்பது கிடையாது. உன்னைக் கண்டவுடன் ஏதோ ஒரு உணர்ச்சி என் மனத்தைப் பிழிகிறது. காரிருளில் கடலில் சிக்கிய கலம் நான். நீ இன்று கலங்கரை விளக்கமாக வந்திருக்கிறாய். நான் இதற்கு வழி உன்னைத் தான் கேட்கப் போகிறேன்,'' என்று என் இரு கரங்களையும் இறுகப் பிடித்துக் கொண்டு கூறினாள் நளினி. அவள் முகம் சற்று வாடியிருந்ததை சந்திரனின் ஒளி நன்கு காட்டியது. அவள் தொடர்ந்து பேசினாள்.

''நான் முன்பே ஒருவரை மனத்தில் எண்ணி இருந்தேன் சந்திரா. அவர் என்னை மணக்க ஆம்பூரில் இருக்கும்பொழுது எவ்வளவோ முயற்சி செய்தார். ஓர் சீர்திருத்தக்காரர் தான். ஆனால், ஊர் முழுவதும் கப்பிக் கொண்டிருக்கும் பனி, கதிரவன் தோன்றியவுடன் மறைந்து விடுகிறதே, அதைப் போல் ஆகி விட்டார். என் அப்பாவின் கோபக் கனல் அவர் உள்ளத்தைக் கரைத்தது! அவர் என் மீது எடுத்துக் கொண்ட வாயடைப்புச் சட்டங்கள் - வெளியில் பார்க்கவே கூடாது என்று விதித்த கண்ணடைப்புச் சட்டங்கள், அந்த அழகனின் மனக் கோட்டையைச் சுக்கு நூறாக ஆக்கிவிட்டது!

சந்திரா, உனக்கு ஆச்சர்யமாகவும், கூச்சமாகவும் இருக்கலாம் நான் பேசுவது. தாலி கட்டிய கணவன் இருக்க, கண்டவனைப் பற்றியெல்லாம் பேசுகின்றேனே என்று நினைப்பாய். ஆனால், சந்திரா, என் கைபிடித்த கணவர் ஒழுங்கானவர் அல்ல! அதை முன்பு என் பெற்றோர்கள் அறியவில்லை.

கோபம் அவர்கள் கண்ணை மறைத்தது. ஆனால் இன்று உணர்கிறார்கள். எனக்கு மணமாகியவுடன் வேலை விஷயமாக என் கணவரை அலகாபாத்திற்கு மாற்றி விட்டார்கள். சில தினங்களுக்கு முன்னர் தான் நாங்கள் இந்த ஊருக்கு வந்தோம். அவருடைய நடத்தை எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. கெட்ட நடத்தைகள் அத்தனையும் அவருடைய மனத்தில் குடிகொண்டிருக்கின்றன. நீ அவற்றை என்னவென்றாலும் வைத்துக் கொள் சந்திரா. நான் முன்பு கூறினேனே எதிர்வீட்டில் இருந்த அழகன் என்று, அவர் எனக்குத் திருமணமாகியவுடன், மனம் உடைந்து ஆம்பூரை விட்டே போய் விட்டார்.

நான் இவற்றையெல்லாம் என் மன வேதனையில் கூறுகின்றேன் சந்திரா. வேறு யாரிடத்திலும் நான் இவ்வாறு கூறியதே கிடையாது. இன்று உன்னிடம் கூறிவிட்டேன்; நீ வெளியில் கூற மாட்டாய் என்ற நம்பிக்கையே டி! எனக்கு ஆறுதல் அளிக்க, இதோ என் மகள் குமுதம் ஒருவள் தான் இருக்கிறாள். கடவுள் அவரை என்று திருத்துவாரோ தெரியவில்லை. கடவுளின் அருள் அவருக்கு என்று வருமோ...'' என்று கூறி ஒரு மூச்சு விட்டாள் நளினி.

அவள் கூறிய கதை எனக்குக் கொஞ்சமும் வருத்தத்தைக் கொடுத்தது.

''நளினி ஏன் வருந்துகிறாய்? பைத்தியக்காரி. இந்த சாதாரண விஷயமா உன்னால் முடியவில்லை. என்றோ எவன் கற்பனையிலோ முளைத்த காளான் டி கடவுள். அவர் என்ன செய்வார்? அவர் அருள் தான் என்ன செய்யும். எல்லாம் உன்னிடம் தான் இருக்கிறது. வாழ்க்கைத் தோணியை இன்பக் கடலில் செலுத்த திறமை என்ற துடுப்பு அவசியம் வேண்டும். அவர் யாருடன் சேர்ந்துப் பழகினால் மனம் மாற்றமடைந்து நல்வழிக்குத் திரும்புவார் என்று நினைக்கின்றாயோ, அவர்களுடன் நட்பு கொள்ளச் செய்ய வேண்டும்.

பாரடி, என் கணவர் சமூக நீதி கிடைக்க வேண்டுமென்று போராடுபவர். சாதி என்ற போர்வையில் உள்ள உயர்வு தாழ்வையும், சமுதாயத்தில் உள்ள இன்ன பிற அநீதிகளையும், அட்டூழியங்களையும் ஒழிக்க முனைந்து நடப்பவர். அவரிடம் உன் கணவர் ஒரு மாதம் பழகினால் போதும். அவரைச் சரிப்படுத்தி விடுவார். கட்டாயம் திருத்தி விடுவார். காரணம் — என் வாழ்க்கையே எனக்குக் கூறுகிறது. அவருடைய குணங்கள் எனக்குக் கூறுகின்றன'', என்றேன் நான்.

நளினி ஏதோ ஊக்கம் பெற்றவளைப் போலானாள். அவளுக்கு என் வாழ்வைப் பற்றி இன்னும் அதிகமாக அறிய வேண்டுமென்ற ஆசை! அவள் ஆவலோடு கேட்டாள்! ''இப்பொழுது உன் கதையை ஆரம்பி சந்திரா. உன்னிடம் பேசுவதிலிருந்தே என் இன்னல்கள் இன்றோடு ஒழிந்தன போல் இருக்கின்றன. எனக்குக் கதை கேட்பதென்றாலே மிகவும் பிரியம். அதிலும் உன் வாழ்க்கையில் நடந்த காதற் கதையையே இன்று கேட்கப் போகிறேன். எனவே ஆவல் என் உள்ளத்தைத் தைக்கிறது. நீ உன் கதையை சுருக்கி விடாமல் நடந்தவற்றை யெல்லாம் கூறிவிடு. என்ன...?'', என்று என் கன்னத்தைக் கிள்ளினாள்.

நான் வேறொரு நாளைக்குக் கூறுவதாகச் சொல்லி முதலில் தட்டிக் கழித்தேன். ஆனால் அவள் என்னை விடுவதாக இல்லை அன்று என்னவோ ஒருவித மகிழ்ச்சி உள்ளத்தே குடிகொண்டிருந்தது. வானிலே வட்டமிட்டுக் கொண்டிருந்த முழு நிலவோ, திங்களின் களங்கத்தைத் துடைத்து விடுவது போல அவளைக் கட்டித் தழுவிக் கொண்டு ஓடிய முகிற் கூட்டமோ, அல்லது என்னை 'கிண்டல்' செய்வது போல் விண்ணிலே மின்னிக் கொண்டிருந்த தாரகைகளோ, என் மகிழ்ச்சிக்குக் காரணம் எனக்குப் புலனாகவில்லை.'

என் தோழியைக் கண்டு வெகு ஆண்டுகள் கழிந்து விட்டன. பின்னர் கூடியிருக்கிறோம். உள்ளத்திலே ஓடிய வெள்ளப் பெருக்கைப் பள்ளித் தோழியும் பகிர்ந்து கொள்ளட்டுமே என்ற எண்ணம் என்னைப் பேசத் தூண்டியது!

நான் கதையைக் கூற ஆரம்பித்தேன்...

''உனக்குத் தான் தெரியுமே. என் வேலை! மருத்துவச் சாலையிலே 'நர்ஸ்'ஆக இருந்துகொண்டு காலையிலிருந்து மாலை வரையிலும் காயம் பட்டு வருபவர்களுக்குக் கட்டு கட்டிக்கொண்டும், நோயாளிகளுக்கு மருந்து கொடுத்துக் கொண்டும் காலத்தைக் கழிப்பவள். எங்களுக்கு சில வாரங்களில் இரவு வேலையாகவும், சில வாரங்களில் பகல் வேலையாகவும் மாற்றுவதுண்டு.

ஓர் நாள் இப்படி நடந்தது.

பகல் பன்னிரண்டு மணி இருக்கும், கடலிலே குளித்து எழுந்த கதிரவன் மிகுந்த கஷ்டத்துடன் வானின் உச்சியையடைந்து, தன்

கத் தட்டைப் போல் காட்சியளித்துக் கொண்டு, தரையிலே ஊற்றிய தாரைக்கூடக் கரைத்துவிடும் அளவிற்குத் தன் வெப்பக் கதிர்களைப் பரப்பிக்கொண்டிருந்தான், அப்பொழுது திடீரென்று ஒரு 'டாக்சி எங்கள் மருத்துவச் சாலையின் முன் நின்றது. இடதுகரத்தின் விரலொன்றில் ஒரு வெள்ளைத் துணி கட்டப் பட்டு இளைஞர் ஒருவர் முதலில் இறங்கினார், அவர் பின்னால் யாரோ ஒரு தொழிற்சாலையின் அதிகாரி இறங்கினர், இளைஞரின் விரலிலிருந்து குருதி கசிந்து கொண்டிருந்தது!

நான் அங்குவேலைக்குச் சென்ற தினத்திலிருந்து இன்று வரையிலும் எவ்வளவோ பெரிய பெரிய காயங்களை உடையவர்கள் எல்லாம் வந்திருக்கிறார்கள். ஆனால் அவை யாவும் என் நெஞ்சை அவ்வளவு வாட்டியதில்லை. ஒருக்கால் பார்த்துப் பார்த்துப்பழக்கப் பட்ட காரணத்தினால் இருக்கலாம். அன்று என்னவோ எனக்கே புரியவில்லை; ஏதோ ஒரு வித இரக்கமும் பரிகாசமும் என் நெஞ்சிலே பாய்ந்து மூளைக்கு வேலை கொடுத்தன. தண்ணீரிலே கிடந்த மீனை சட்டென்று தணலிலே இட்டால் அதற்கு ஏற்படும்உணர்ச்சியைப் போன்று இருந்தது எனக்கு!

வைத்தியரிடம் காட்டி விட்டு, கட்டு கட்டிக் கொள்ள என்னிடம் வந்தார். பெருத்த காயம்! அது குணமாக, குறைந்தது ஒரு மாதம் பிடிக்கும் என்று கூறினேன். ஏற்கனவே வாடிக் கிடந்த அவர் முகம் இன்னும் வாடி விட்டது. அந்த வாட்டம் என் மனத்தைக் காயப் படுத்தி விட்டது. அவர் காயத்தைக் குணப்படுத்துவது கடினமல்ல—நான் அந்தத் துறையில் நன்கு பழக்கப் பட்டிருந்தேன். ஆனால் என் மனத்திலே உண்டான காயம்! அதைக் குணப்படுத்த அவரால் முடியுமா என்று எண்ணினேன்.

நாட்கள் உருண்டோடின. தினமும் காலையில் அவர் மருத்துவசாலைக்கு வந்து போவார், அவரிடம் நான் நன்கு பேசிப் பழகினேன், அவருடைய வீட்டு விஷயங்களையும் பற்றிக் கூட அவ்வப்பொழுது ஏதாகிலும் கொஞ்சம் கூறுவார். அவருடைய பேச்சிலிருந்து, அவர் முன்பு ஒரு பெண்ணைக் காதலித்து, காதலில் தோல்வியைக் கண்டிருந்தார் என்று மட்டிலும் புரிந்து கொள்ள முடிந்தது.

நளினி, உனக்குத் தான் தெரியுமே "நர்ஸ்" களின் வாழ்க்கைத் தரம்! நீ பார்த்திருக்கலாம் அவர்களின் சல்லாப வாழ்க்கையை—ஒரு வேலை செய்வதற்குள் முப்பது கிண்டல் பேச்சுகள் அந்த வைத்தியர்கள் பேசுவதை. நிறைய மீனுள்ள இடத்தில் வலைஞன் வலை வீசுவதைப் போல, இவர்களும்—கண்வலை வீசுவார்கள்.... எங்கு...? அழகும் களையும் எங்கிருக்கிறதோ அங்கு...! அவர்கள் வேலையே இப்படித்தான்! எத்தனையோ பேச்சுகள்; எத்தனையோ புன்னகைகள்! கோழிக் குஞ்சுகளுக்கு நரி கண்ணீர் வடிப்பதைப் போன்று அவர்கள் எங்களிடம் செய்வதுண்டு. ஆனால் நளினி, என் அழகு, என் மனம் இவற்றை முற்றுகை இட எவராலும் இயலவில்லை.

அந்த ஒரே' ஒரு இளைஞர், விரலிலே காயம் பட்டு வந்தாரே, அவரால் தான் முடிந்தது! இல்லை... அவரால்கூட முடியவில்லை... ஏன்? அவர் என் மனத்தைக் கவரவே எண்ணவில்லை. நானேதான் சரணாகதியடைந்தேன்......! உண்மையில் அவர் அழகு என்னை அவருக்கு அடிமைப் படுத்தி விட்டது. அவர் பேச்சின் இனிமை என்னைப் பரவசப் படுத்தியது.

நாட்கள் உருண்டோடின. ஒரு மாதம் எவ்வாறு கழிந்ததென்றே புலனாகவில்லை! விரல் காயம் குணமடைந்து விட்டது! இனியும் அவர் வருவது அவசியமில்லை என்று வைத்தியர் கூறிவிட்டார். என்னிடம் விடை பெற்றுக்கொண்டு, வருவதை நிறுத்திக் கொண்டார். அப்பொழுது என் மனத்தில் வேல் பாய்ச்சியது போல் இருந்தது! அவரையே எண்ணி உருகினேன். அவர் எங்கு இருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. நான் வதியும் இடமும் அவருக்கு தெரியாது! நாட்கள் பல இவ்வாறு கழிந்தன. கோடைக் காலத்திலே சில வேளையில் வரும் இளந் தென்றல் அவர் என்று தான் அவரைக் கருத முடிந்தது. எவ்வளவோ நிகழ்ச்சிகள் நடக்கின்றன. முதலிலே எதிர் காலத்தில், பின்னர் நிகழ் காலத்தில், பின்னர் அவையே இறந்த காலத்திற்குச் சென்று விடுகின்றன. அதுபோல ஆகிவிட்டது இந் நிகழ்ச்சியும்!

அருவியாகத் தோன்றிய நாட்கள் மாதங்களென்ற நதியாக உருவெடுத்து உருண்டன!

ஓர் நாள்......

எங்கள் ஊரில் காங்கிரஸ் பொருட்காட்சி ஒன்று நிறுவினார்கள். அதற்கு நான் சென்றிருந்தேன். ஞாயிற்றுக் கிழமையானதால் அன்று ஒரே அமர்க்களமாய் இருந்தது. அன்று கூட இன்று போல் தான் நளினி, பால் நிலவு! தென்றல் வேறு எங்கிருந்தோ சுமந்துவந்த நறுமணத்தைத் தூவித் தூவி ஓடியது! என் மனம் நிம்மதியாக இல்லை. ஊன்று கோல் அற்ற முல்லைக் கொடி காற்றில் துவண்டு விழுவதைப் போல என் நிலை அன்று இருந்தது.

அப்பொழுது தான் 'அவர்' வந்து கொண்டிருந்தார், எதிரில்; என் பார்வை சென்று அவர் மலர் முகத்தில் மோதியது! அவரும் கண்டார். குறுநகை புரிந்தார். அன்று தான் எங்கள் முதல் சந்திப்பு! அதாவது எங்கள் காதல் வாழ்வின் முதல் அத்தியாயம் அன்று தான் ஆரம்பமாகியது.....! வெகு நேரம் பேசிக்கொண்டே உலவிக் கொண்டிருந்தோம். காற்றிலே சிக்கிய உலர்ந்த இலை எங்கள் பேச்சு! அரசியலில் ஆரம்பித்தது அந்தரங்க விஷயங்களுக்கெல்லாம் கொண்டு சென்று விட்டது. இது போல அன்று கழிந்தது......!

இது இன்னொரு நாள் நடந்த நிகழ்ச்சி! அன்று கடைத் தெருவுக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். திடீரென வான் இருண்டது. கரு முகில்கள் ஒன்று திரண்டன! இடி இடித்தது! மின்னல் ஒளிப் பிழம்பை வாரி வாரி வழங்கிய வண்ணமிருந்தது. பெருத்த மழை வரத்தான் போகிறது என்ற கருத்தோடு விசையாக நடந்தேன். மழையும் தூற ஆரம்பித்தது! எங்கள் வீட்டிற்கு வரும் வழியில் இருக்கிறதே ஒரு 'அஞ்சல் அலுவலகம்' (Post Office) அங்கு வந்திருப்பேன். மழை 'சோ' வென்று பெய்ய ஆரம்பித்து விட்டது. உடனே அங்கு தாழ்வாரத்தில் சென்று நின்றேன். ஒரே இருளாக இருந்தது! தனியாக நின்றிருந்தேன். புயல் வேறு சுழற்றி சுழற்றி வீசிப் பயமுறுத்திக்கொண்டிருந்தது. அன்று குடை கூட கொண்டு போக இல்லை. மழையும் விடாமல் பெய்து கொண்டிருந்தது!

கொஞ்ச நேரம் கழிந்தவுடன் யாரோ சிலர் வந்து அங்கேயே மழைக்கு ஒதுங்கி நின்றனர்.

பின்னர் வேறு ஒருவர் குடை பிடித்துக் கொண்டே நுழைந்தார். மழை கனமாகப் பெய்து கொண்டிருந்தது. வீதியிலிருந்த சாக்கடை கூட நிறைந்து நீர் வெளியிலே ஓட வீதியே சாக்கடைபோல—இல்லை, சிறு நதியைப் போல—காட்சியளித்தது. நான் பேசாமல் நின்றிருந்தேன். அப்பொழுது அங்கு வந்து திரும்பிய ஒரு உந்து வண்டியின் விளக்கொளி பக்கத்திலிருந்த அந்த 'குடை தாங்கி' யாரென்று காட்டியது. அது தான்... 'அவர்'... என்மனத்தைக் கொள்ளைகொண்டவர் நின்றிருந்தார். உடனே நானாக அவரிடம் சென்று பேச ஆரம்பித்தேன்.

"எங்கே... நீங்கள் கூட மழையில் சிக்கிக் கொண்டீர்கள்," என்றேன்.

அவர் சிரித்துக் கொண்டே, "ஓகோ... நீங்கள் தான் நின்றிருந்தீர்களா? மன்னிக்கவும். நான் உங்களைக் கவனிக்கவே இல்லை," என்று கூறினார்.

மீண்டும் ஏதோ பேச்சு ஆரம்பித்தது. மழையும் குறைந்து வந்தது. 'ஜில்' என்று குளிர் காற்று மட்டும் விடாமல் வீசியது!

"செல்லலாமா" என்று கேட்டேன், அவரும் புறப்பட்டார். குடை பிடித்துக் கொண்டே என் வீடு வரையிலும் வந்து என்னை விட்டு விட்டுச் செல்வதாகக் கூறி என்னுடனேயே வந்தார். நாங்கள் நடுக்கும் குளிரில், ஒன்றாக குடையின் கீழ் நடந்து கொண்டிருந்தோம்.

இருவரும் என் வீட்டையடைந்தோம். சிறுகப் பொழிந்த மழை மீண்டும் பெருமழையாக உருவெடுத்தது! அவரைச் சற்று நேரம் குந்தச் சொல்லி, என்னால் முடிந்த அளவில் உபசரித்தேன். எங்கள் வீடு மிகவும் பிடித்திருப்பதாகப் புகன்றார்.

இன்னும் என்னைவேறு புகழ்ந்து ஏதேதோ கூற ஆரம்பித்தார்! ஆம்! அன்றிலிருந்து எங்கள் மனமே ஒன்றிவிட்டது! பூங்காவிலே பூத்துக் குலுங்கிடும் மலர் வெவ்வேறாக இருந்தாலுங் கூட அவற்றின் நறுமணம் வேற்றுமையின்றிக் கலப்பதை நீ கண்டதில்லையா நளினி. அது போலத்தான் என் விஷயத்திலும். அவர் என் சாதி இல்லை. இன்றைய சமுதாய முறைப்படி நான் சற்று தாழ்ந்த சாதிதான்! அது எனக்கும் தெரியும், அவருக்கும் நன்றாகத் தெரியும்! இருப்பினும் எங்கள் இரு உள்ளங்களிலிருந்து கிளம்பிய அன்பு என்ற மணம், காதல் என்ற காற்றில் கலந்தது!

நான் அவருடன் பழகப் பழக அவருடைய குணங்கள் யாவற்றையும் நன்கு அறிந்து கொள்ள முடிந்தது! சமூகத்திலே ஏய்த்துப் பிழைக்கும் எத்தர்களையும், சுரண்டிப் பிழைக்கும் சூழ்ச்சிக் கும்பலையும், சாதிப் பெருமை கூறும் சாக்கடைப் புழுக்களையும் அழிக்கப் புறப்பட்டுள்ள!! ஆணழகன் என் அத்தான் என்று தெரிந்து கொண்டேன். அவை எல்லாவற்றையும் விட பெண்களே முக்கியமாக எதிர்பார்க்கின்ற அந்த 'காதல் உள்ளம்' அவரிடமிருக்கிறது! எனவேதான் அவர் என் மனத்தைக் கவர முடிந்தது.

நளினி, உன் அப்பாவைப் போன்றுதான் அவர் அப்பாவும் — அதாவது இன்று என் மாமனாராக இருப்பவர்—மிகவும் கண்டிப்பானவர். அவரைப் பற்றி, அத்தான் எனக்கு பலமுறை கூறியதுண்டு. அவர்கள் வீடே வைதீக சாகரம் தானாம்.

ஆனால் துர் நாற்றத்தையே உடைய சேற்றிலே செந்தாமரை தோன்றி, காற்றிலே நறுமணத்தைக் கலக்க வில்லையா? மாதரின் மதியை மயக்கி, அவர்கள் மார்போடு கொஞ்சி விளையாடுகிறதே முத்து, அது எங்கு பிறக்கிறது? நத்தையின் வயிற்றில் தானே.........! அது போலத்தான் அவரும்!

இப்பொழுதெல்லாம் அவர் தினமும் மாலையில் எங்கள் வீட்டிற்கு வரத் தவறவே மாட்டார். தொழிற்சாலைக்குச் சென்றுவிட்டு களைப்போடு நேரே எங்கள் வீட்டிற்குத் தான் வருவார்...அவர்வருவதற்குத் தடையாக பலர் நின்றனராம்' தந்தையின் கோபக் கனல், அன்னையின் அருள் வாக்கு, நண்பர்களின் உபதேசம், உற்றாரின் சூழ்ச்சி, இவையெல்லாம் படையெடுத்தன. ஆனால் சிறு நரிகளின் சீற்றத்தைக் கண்டு சிங்கம் சிந்தை கலங்குவதில்லை! கப்பிய பனியைக் கண்டு கதிரவன் கதிகலங்கித் தோன்றாமல் இருப்பதில்லை!

நான் சில நாட்களில் அவரைக் கேட்பதுண்டு, "ஏன் இவ்வளவு பேச்சு, உற்றார் உறவினர் எல்லோரிடத்திலும் வாங்கிக் கொண்டு தினமும் வருகிறீர்கள். வாரத்திற்கொரு முறை சந்திப்போமே" என்று கூறுவேன்.

அதற்கு அவர் கூறுவார், "சந்திரா, உனக்குத் தெரியாது அதையெல்லாம் உண்மையில் அவர்கள் கூறவில்லை. "பழமை" என்றபேய் தான் அந்த உருவங்களில் தோன்றுகின்றது! ஆனால் அதை எதிர்த்து நிற்பதுதான் ஆண்மை கண்ணே," என்று கூறுவார். நளினி நான் என்னடி செய்யட்டும்?

ஒரு நாள் நளினி, இரண்டாண்டுகளுக்கு முன்னர், திடீரென்று என்னை 'உலவச் செல்லலாம் வா' என்று அழைத்தார். அப்பொழுது இரவு பத்துமணியிருக்கும். எனக்கு அவருடைய அழைப்பு வியப்பாக இருந்தது! காரணம்—இரவில் அது போல அவர் வந்ததே கிடையாது! நானும் புறப்பட்டேன்......! வழியில் மெதுவாக ஒரு விஷயத்தைக் கிளப்பிவிட்டார்.

"என் அப்பா எனக்கு சீக்கிரத்தில் விவாகம் செய்யப் போகிறார்


## சிறந்த நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| **தில்லைவில்லாளன் எழுதியது—** | | |
| திருடர்கள் இராஜ்யம் | 0 | 6 |
| **ஏ. வி. பி. ஆசைத்தம்பி—** | | |
| வரண்ட வாழ்க்கை | 0 | 8 |
| கொலைக்காரி | 0 | 12 |
| இருண்ட வாழ்வு | 0 | 12 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | 0 | 12 |
| **இராதாமணாளன்—** | | |
| மனப்புயல் | 1 | 8 |
| பொற்சிலை | 1 | 0 |
| ருஷ்ய காட்டழகி | 0 | 8 |
| இன்பக் கனவு | 0 | 8 |
| பேசும் பிணம் | 0 | 8 |
| மயானத்தில் முத்தம் | 0 | 8 |
| **இளஞ்செழியன்—** | | |
| தமிழன் தொடுத்த போர் | 1 | 12 |
| சரிந்த சாம்ராஜ்யம் | 0 | 10 |

**பகுத்தறிவுப் பாசறை**

பவழக்காரத் தெரு, சென்னை 1

சந்திரா...நான் விவாகம் செய்து கொண்டால் உன்னை மறக்க நேரிடும்......" என்று இழுத்தார்.

அதைக் கேட்டவுடன், ஆயிரம் தேள்கள ஒரேயடியாகக் கொட்டினாற் போன்று இருந்தது! எனக்கு ஒரே கோபம் வந்தது! உடனே "இதைக் கூறத்தானா உருக்கமாக அழைத்தீர்கள்," என்று கேட்டேன்.

அதற்குள் அவர், "இல்லை கண்ணே — நான் என் பேச்சை முடிக்கவே இல்லை. அதற்குள் கோபித்துக் கொள்கிறாயே......இப்படி உனக்குக் கோபம் வரும் என் எனக்கு முதலிலேயே தெரியும். எனவேதான் என் அப்பா கூறும் பெண்ணை மணந்துகொள்ளப் போவதில்லை! உன்னையே மணப்பது என்று முடிவு செய்து இருக்கிறேன் சந்திரா...நீ என்ன கூறுகிறாய்," என்று என் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கேட்டார்.

பாலைவனப் பிராணி, வெப்பத்திலே நடந்து நடந்து ஓய்ந்து போய், வழியிலே தோன்றும் கானலை எல்லாம் கண்டு ஏமாந்து களைத்து வரும் பொழுது திடீரென்று தென்றல் உலவும் பேரிச்சம் சோலையே கண்ணில் பட்டால் என்ன உணர்ச்சி வந்துவிடும் அம்மிருகத்திற்கு!

மழை இல்லை. பயிர் போட்டாலும் பலன் இல்லை, வளராது என்று உழவன் கூற, இதோ நாங்கள் வரவைக்கிறோம் என்று மார்தட்டி பூசுரக் கும்பல்கள் யாகம் வளர்த்தி அதில் மழை வராமல் ஏமாந்து போய், பாட்டிமார்கள் இதோ நாங்கள் வரவழைத்து விடுகிறோம் என் கூறி, வருணபகவானை நினைத்து, ஏரியைச் சுற்றி மாரடித்து அழுதும் மாரி வராமல் மக்கள் திகைக்கும்போது; ஒரு விஞ்ஞானி வந்து, 'ஏன் இந்தப் பரிதாப நிலை விஞ்ஞானம் இருக்கும் பொழுது' என்று கூறி பனித்தூளைத் தூவிக் கருமுகிலை வரவழைத்துக் கனத்த மழையைப் பொழியவைத்து விட்டால், ஏர் முனை பிடிக்கும் அந்த ஏழையின் உள்ளம் என்ன மகிழ்ச்சியில் ஆழ்ந்துவிடும்? எவ்வளவு போற்றுவான் விஞ்ஞானத்தை! அவனைப் போல இருந்தது என் நிலையும்.

எனக்கு அவரிடம் என்ன கூறுவதென்றே தெரியவில்லை! அவரைக் கட்டியணைத்துக் கொண்டே, "உண்மையாவா அத்தான்......" என்றேன். அது என் அடிவயிற்றில் இருந்து வந்த வார்த்தைகள்.

'உண்மைதான் சந்திரா. இன்னும் சில தினங்களில் எனக்கு நிச்சயதார்த்தம் செய்ய இருக்கிறார்கள். அதற்குள் நம் மணம் முடிய வேண்டும்' என்றார் அவர்.

"நாங்கள் அதன்படியே செய்தோம். இன்று அவரை சாதியை விட்டு நீக்கிவிட்டார்களாம். வீட்டில் இனி காலெடுத்து வைக்க வேண்டாம் என்று கூறிவிட்டார்களாம். நான் ஒழுக்க மற்றவன் என்று வேறு பேசுகிறார்கள். அவரை இழந்ததால் யாருக்கு நஷ்டம். அவர்களுக்குத்தானே! ஆனால் இனி மணமாகப் போகும் இளைஞருக்கு என் கணவர் வழிகாட்டியாக இருக்கிறார் அந்த வழியில் நடந்தால் சாதி ஒழிந்துவிடும் தம்பி என்று!

அவருக்கு வரும் சம்பளமும், எனக்கு வரும் சம்பளமும் எங்கள் சிறிய குடும்பத்திற்குத் தலைக்கு மேல் வெள்ளமாக இருக்கிறது. நளினி, கடைசியாக உன்னைக் கேட்பது-எப்படியாகிலும் உன் கணவரை இவருக்குச் சிநேகிதராக்கிவிடு! -பார் இன்னும் ஒரு மாதத்தில் அவர் திருந்திவிடுகிறார்," என்று கூறி நிறுத்தினேன்.

அதற்குள் நளினி, "இந்நேரம் பேசிக்கொண்டிருந்தாயே சந்திரா. அவருடைய பெயரையே கூறவில்லையே" என்றாள்.

நான் சிரித்துக் கொண்டே, அவருடைய புகைப் படம் ஒன்றை எடுத்துக் காட்டி, "இவர்தான்...... பெயர் சுகுமாரன்" என்றேன்.

அவள் அதைக் கண்டவுடன் சட்டென்று முகம் மாறியது! நான் உடனே கேட்டேன் அவள் முக மாற்றத்திற்குக் காரணம் என்ன என்று! அவள் கூறினாள், "சந்திரா, நீ மிகவும் பாக்கியசாலிதான். நானும் முதலில் இவரைத்தான் சொன்னேன். இவர்தான் ஆம்பூரில் எங்கள் எதிர் வீட்டில் இருந்தவர்," என்றாள்!

## திராவிட மாணவிகள் முன்னேற்றக் கழகம்

### செயங்கொண்ட சோழபுரம்.

செயங்கொண்டத்தைச் சேர்ந்த மேலக்குடியிருப்பு சி. கமலம் இல்லத்தில் 14—12—50-ந் தேதி மாலை 3 மணிக்கு சு. மங்கையர்க்கரசி தலைமையில் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. கீழ்க்கண்ட நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

செயலாளர்:—சி. கமலம்; துணைச்செயலாளர்:—சு. மங்கயர்க்கரசி; பொருள்காப்பாளர்:— அ. மேரிச்செல்வி; விளம்பர உறுப்பினர்:—ச. எழிலரசி; மற்றும் இவர்களை உட்கொண்ட நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப் பட்டது. அது போது நிறைவேற்றிய தீர்மானங்கள்:—

1. அறிஞர் அண்ணாவின் வழியைப் பின்பற்றி நடப்பது.

2. நாரணமங்கலத்தில் பேச்சுரிமையைக் காக்க 144 தடையை மீறி சிறைபுகுந்த தன்மானத் தோழர்களைப் பாராட்டுவதோடு, ஆணவ ஆட்சியின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

3. "ஆரியமாயை" புத்தகம் எழுதியதால் அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் அபராதம் கட்ட மறுத்து சிறைசென்று திரும்பிய பிறகு அண்ணாவின் மீது சப்தி வாரண்டு செய்து, 'திராவிடநாடு' அலுவலகத்திலிருந்து நாலு பேன் பேப்பர்களை பறிமுதல் செய்த அரசாங்கத்தின் கொடுஞ் செயலை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

—

இராதாமணாளன் இயற்றிய

**இரு புதிய கற்பனைகள்**

**இளவரசி** ரூ. 1 8 0

200 பக்கங்கள். எல்லோரும் விரும்பி எதிர்பார்த்தது. தீஞ்சுவைத் தமிழ் நடை—நெஞ்சை அள்ளும் கருத்துக்கள் செறிந்த கற்பனைச் சித்திரம்.

**மூடுபனி** ரூ. 1 0 0

தமிழ் இலக்கியப் பூஞ்சோலையில் பூத்த புது மலர். மக்கள் மனப் போராட்டங்கள்—உள்ளக் குமுறல்கள் மூடுபனிபோல் மறைந்து நல்ல முடிவு ஏற்படும் நிலையை—அவருக்கே உரித்தன அழகிய நடையில் விளக்குகிறார் ஆசிரியர்.

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு சென்னை.

# பாலில் குளிக்கும் பக்தர்கள்!

## பணத்தில் குளிக்கும் பாராளுவோர்!

### மதத் தேரில் மமதைத் தேள்கள்!

—X—

[ சி. ஜெனார்த்தனன். ]

புயலுக்கிடையிலே தான் தென்றலுக்கிடையிலே அல்ல, புத்துலகை நோக்கிப் பகுத்தறிவுப் பட்டாளம் அடியெடுத்து வைத்தது. அலையின் அழகும் கடலின் கவினும் அல்ல, அடிக்கும் காற்றும் குமுறும் கடலும் தான் நம் கருத்தை அன்று கவர்ந்தன. மமதையாளரின் சொல்லடியும் கருத்துக் குருடரின் கல்லடியும், யாங்கணும் நீக்கமற நிறைந்திருந்த காலத்திலேதான், இலட்சியப் பாதையிலே அறிவியக்கம் பரணி பாடிச் செல்ல ஆரம்பித்தது.

காரிருளிலே, அறிவொளி பரப்ப நாம் ஆரம்பித்து, கால் நூற்றாண்டைக் கடந்து விட்டோம். ஆயிரமாயிரம் இளைஞர்களது இதயங்களில், நம் பகுத்தறிவுப் பரணி எதிரொலித்திருக்கிறது. எண்ணிலடங்கா மாணவர்களது உள்ளங்களை, புத்துலகக் கருத்துக்களின் பாசறைகளாக உருவாக்கியிருக்கிறோம். இலட்சியப் பாதையின் போக்கிலே தாலமுத்து நடராசர்களை, உடையார்பாளையம் வேலாயுதங்களை, அஞ்சா நெஞ்சுள்ள அழகிரிசாமிகளை, மற்றும் எண்ணற்ற மாவீரர்களை, காட்டுமிராண்டித்தனம் நம்மிடமிருந்து பிரித்திருக்கிறது. தடியடியால் தளராமல், துப்பாக்கிப் பிரயோகத்தால் துவளாமல், சிறைக்கோட்டத்தால் சிதையாமல், விலங்கிட்டதால் வளையாமல், அடிக்க அடிக்க கால் பந்து திமிறி எழுவது போல, எதிர்ப்பிலே பிறந்து, எதிர்ப்பிலே வளர்ந்து எதிர்ப்பினூடே எஃகுக் கோட்டையாகியிருக்கிறோம். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இன்பத் திராவிடத்தில் காரிருளும் கும்பிருட்டும் குடிகொண்டிருந்தன. இன்றும் காரிருள் இருக்கிறது. ஆனால் அதற்கிடையிலே செவ்வொளியும் தெரிகிறது. இருட்டைக் கிழிக்கும் விடிவெள்ளி போல, திராவிடத்தின் விடுதலை இயக்கம் இருக்கிறது. அன்று அரும்பாயிருந்தோம். இன்று நாட்டிலே, மறுமலர்ச்சியை முகிழ்க்க வைக்கும் மலராக, மலர்ந்து விட்டோம்!

ஆனால் ஒன்றை மறந்துவிடக் கூடாது. நாம்இன்னும் காரிருள் படர்ந்திருக்கிறது நாட்டில்! அரும்பாயிருந்து மலராகி விட்டோம், உண்மைதான். ஆனால் முள்ளில்லாத ரோஜாவாக அல்ல. முள்ளில் ரோஜாவாகத் தானிருக்கிறோம்! எத்தர் கோட்டையிலேதான், எரிகொள்ளியாயிருக்கிறோம். வெற்றிப்பாதையிலே போய்க்கொண்டேயிருக்கிறோம், ஆனால் இன்னும் இலட்சியபுரியை அடைந்து விடவில்லை!

சமுதாயத்தைச் சுரண்டும் பெருச்சாளிகள், மக்களைச் சுரண்டும் முதலாளித்துவம், நாட்டைச் சுரண்டும் அன்னிய ஏகாதிபத்யம், இவைகளுக்கு ஆக்கம்தரும் ஆட்சிப்பீடம், இத்தனையையும் எதிர்த்து அறப்போர் தொடுத்திருக்கிறோம்.

சரிவதற்கு முன் சாம்ராஜ்யாதிபதிகள் சமுதாயத்தைச் சுடுகாடாக்கி விட்டுத்தான் சரிந்ததாக, வரலாறுகூறுகிறது. பாரதம், தேசியம் என்ற முகமூடிகளை தங்கள் மாய் மாலங்களை மக்கள் அறிய வொட்டாமல் தடுப்பதற்காக அணிந்து கொள்ளும் ஆணவக்காரர்கள், இதற்குவிதிவிலக்கல்ல. எனவே அவர்களுடைய அடக்குமுறை ஆர்ப்பரிப்பைக் கண்டு ஆச்சரியப் பட வேண்டியதில்லை. சீர்கெட்டிருக்கும் சமுதாயம், மரணத்தின் வாயிலில் உலாவும் மக்கள், பண மூட்டைகள் கொழுக்கப், பாலைவனமாகியுள்ள நாடு, ஆகியவைகளைக் கருத்தில் கொணருங்கள்!—நம் முன் இருக்கும் வேலை எவ்வளவு பிரம்மாண்டமானது என்பது நன்கு புரியும். "சமூகம் மாறுதல் அடைந்து விட்டது. ஆகவே, ஏதோ, என்றோ நடந்ததைக் குறித்து இன்று பேசுகிறீர்களே! ஒரு முறை கூறினால் போதாதா? நாடோறும் அரைத்து வருகிறீர்களே." என்று பலர் நம்மைப் பார்த்து, ஆத்திரத்துடன் கேட்பதுண்டு. இப்படிக் கேட்பவர்களிலே மமதையாளர்களுமுண்டு உண்மையாகவே உளம் நொந்து கேட்பவர்களும் பலர் உண்டு. அவர்களுக்குத் தருகிறேன் ஒரு காட்சியை! கற்பனைச் சரக்கல்ல, நாட்டிலே நடக்கும் சம்பவம்!

இருபதாம் நூற்றாண்டில், அணுக்குண்டு யுகத்தில், பாதி உலகம் சிகப்பாகிவிட்ட பிறகு, திராவிட நாட்டில், பாலாபிஷேகம் நடக்கிறது. 'கல்லுக் கடவுளுக்குக் கூட அல்ல, கடவுளின் பிரதிநிதி என்று கூறப்படும் ஒரு மனிதருக்கு!

திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண பிரம்மச்சாரிய சுவாமிகள், என்பவருக்கு, கோட்டார் என்னும் ஊரிலே நடைபெற்றிருக்கிறது! அவரைப் பல்லக்கிலே வைத்து, மாடுகளல்ல, மனிதர்கள் சுமந்து கொண்டு செல்லும் போது, பாலைக் குடம் குடமாக அவன் தலையிலே ஊற்றி அபிஷேகம் செய்தார்களாம் நான் கூறுவதல்ல, நடைபெற்ற சம்பவம். அவர் ஆத்திகப் பிரச்சாரம் செய்து கொள்ளட்டும். அதை நாம் மறுத்து அறிவுப் பிரச்சாரம் செய்வோம். ஆனால், மனிதரை மனிதர் ஆத்திகத்தின் பெயரால் சுமப்பதா? மதம் என்னும் தேரிலே, கடவுள் பிரதிநிதிகள் என்று கூறப்படுவோர் பவனி வரும் போது, மாடுகளல்ல, மனிதர்கள் இழுக்கிறார்கள்! "கடவுள்" என்று கூறப்படும் பொருளுக்குக் கூட அல்ல, "கடவுள் பிரதிநிதி" எனறு நம்பப்படும் ஒரு மனிதருக்குப் பால் அபிஷேகம் நடைபெறுகிறது. நல்லறிவாளர் நாணமடைய வேண்டிய நிகழ்ச்சி. வேதனை தரும் விசித்திரம். ஆனல் நாட்டு நடப்பு! அரைத்த மாவையே திருப்பித்திருப்பி அரைக்கிறோம் என்று கூறும் அன்பர்கள், சிந்தித்துப் பார்க்கட்டும். இது சமுதாயம்!

பகவானின் பெயரால் பக்தர்கள் பாலில் குளிக்கும் நிலை சமுதாயத்தில் மாறவில்லை என்றால், பாரத மாதாவின் பெயரால் பாராளுவோர் பணத்தில் குளிக்கிறார்கள். இவ்விரண்டு வர்க்கத்தாரின் கூட்டு வலையத்தில் சிக்கிக் கொண்டு சீரழிகிறார்கள், மக்கள். எனவேதான் நாடு பாலைவனமாகிறது.

அண்மையில் டில்லி ஏகாதிபத்தியம், அன்னிய, சுதேசி முதலாளிகளுடன், இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தகத்தை நடத்தினர். அதிலே அவர்கள் போட்ட மூலதனம், திருப்பதி வெங்கடாசலத்தானின் உண்டியில் போட்ட பணம் போலாகி விட்டது. சர்க்கரை வணிகத்தில் 133 இலட்சம், சணல் வர்தகத்தில் 600 இலட்சம், பருத்தியில் 20 இலட்சம், ஆக 750 இலட்சம் ரூபாய், மக்கள் பணம், அதோகதியாகிவிட்டது இதை, 25-11-50 தேதிய 'பிளிட்ஸ்' ஏடு எடுத்துக் காட்டியிருக்கிறது.

ஹைதர் அலி காலத்திலோ, டல்ஹௌஸி காலத்திலோ வாங்கிய இஞ்சின்களை வைத்துக் கொண்டிருப்பதால்தான், ரயில் விபத்துகள் அடிக்கடி ஏற்படுகின்றன. அதனால மக்கள் பணம் வீண் விரயமாகிறது. உதாரணமாக 1950 ஜூன் மாத முதல் செப்டம்பர் மாதம் வரை நான்கு மாதங்களில் ஏற்பட்ட 653 விபத்துக்களின் மூலம், ரயில்வே இலாகா, ரூ. 31,000 யை இழந்திருக்கிறது. தகுதி அமைச்சராகவும், திறமை துணி அமைச்சராகவும் ஆட்சி செலுத்தும் ரயில்வே இலாகா, என்பதை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். அகதிகளுக்கு உதவி அளி என்ற மத்திய அரசாங்கத்தின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக, இராஜஸ்தான் அரசாங்கம் 40 இலட்சம்வரை 'கைப்பொருளை' இழக்க வேண்டி வந்தது! இவைகள் பெருங்கடலிலிருந்து தரப்படும் சில துளிகள், சாம்பிளாக!

அண்மையில் மதிப்பிற்குரிய இந்தியத் தூணைக் கண்டத்தின் ஆட்சித் தலைவரான பாபு ராஜேந்திரப் பிரசாத், தனித்து ஆண்டவனை வணங்குவதற்காக, 2 இலட்சம் ரூபாய் செலவில், அரசாங்க மாளிகையில் ஒரு கோயிலைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாக, செய்தி கிடைத்தது. இதுவும் "மதச் சார்பற்ற" ஆட்சியில் நிகழும் வேடிக்கை!

இவைகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதன் வழி செயலாற்ற வேண்டும், அறிவுத் தென்றலைப் புயலாகக் கருத்தில் கொண்டு ஆத்திரமடையும், அன்பர்கள்.

பாலில் குளிக்கலாமா, பக்தர்கள்? பணத்தில் குளிக்கலாமா பாராளுவோர்? மதத் தேரில் மமதைத் தேள்கள் பவனி வருவதை அறிவுலகம் அனுமதிக்கலாமா? இக் கேள்விகள், மக்கள் உள்ளத்திலே குமுற வேண்டும்! ஆம்! குமுறும்படி செய்ய வேண்டும் அறிவியக்க அன்பர்கள்!


வந்து விட்டது! வந்து விட்டது!

## ஒரே முத்தம்

* தோழர். மு. கருணாநிதியின் கருத்தையள்ளும் நாடகம். கலை மதிப்பு வாய்ந்தது.

* கண் கவரும் புதிய, அழகிய மேலட்டையுள்ள இரண்டாம் பதிப்பு. விலை. 1 4 0

## கன்னியின் சபதம்

* தோழர், ப. கண்ணனின் செந்தமிழ்ச்சுவை கனிந்த நாடகம். வானொலி மூலம் மக்கள் மனதைக் கவர்ந்தது.

* பெண்மையின் வீரச்சித்திரம், அழகிய பதிப்பு. விலை 0 8 0

வியாபாரிகளுக்கு தக்ககழிவு உண்டு.

விபரங்களுக்கு:—

## தென்றல் நூற்பதிப்புக் கழகம்

சலகண்டபுரம். சேலம் மாவட்டம்.

தொடர் நாடகம்.

# திலோத்தமா

தீட்டியது:—கு. தனபாலன்.

## அங்கம் 3

இடம்: ராஜகுரு அரண்மனை.

[ராஜகுரு ஆலவாயர் குழப்பமுடன் அறையின் மேலும் கீழும் உலவிக் கொண்டிருக்கின்றார்......]

ஆலவாயர்: நாளைய விசாரணையின் தீர்ப்பே முடிவானது! என்ன அகம்பாவம்? நான்மட்டும் அரசனாக இருந்தால்......

[பேராசைக் கோட்டை மனதில் எழுகின்றது. கருங்காலி கருநாகன் வருகிறான்]

ஆலவாயர்: ஹூம்....கருநாகா...வா...வா....நல்ல சமயத்தில் தான் வந்தாய்! ஹூம்...உன்னைப்போன்ற வீரர்கள் சாமர்த்தியமாக ஆனால் துணிச்சலுடன் காரியமாற்றினால் எவ்வளவோ சீக்கிரத்தில் முன்னுக்கு வந்துவிடலாம். ஹூம்....ஆசை இருந்து என்ன செய்வது?

கருநாகன்: ஸ்வாமி! தங்களால் முடியாதது என்று ஒன்றுண்டா? சமயம் நேரும்போது நான் உங்களுக்கு நல்ல உதவியாய் இருப்பேன் ஸ்வாமி!

ஆல: சமயம் இனி நேர்வதென்ன....அது நேற்றே நேர்ந்துவிட்டது!

கரு: அப்படியென்றால்...?

ஆல: இன்னுமா புரியவில்லை? எங்கள் குலத்தவருக்குத் தீங்கிழைத்த துரோகியைத் தண்டிக்காது தரும நியாயம் பேசினை மடையன்...இந்த ஆலவாயன் யாரென்பதைத்தெரிந்து கொள்ளாத அறிவிலி அவன் இருக்கக்கூடாது இப் பூவுலகில்! இது என் அன்னை பூமாதேவியின் ஆக்ஞை!

கரு: ஸ்வாமி, சற்றுத் தெளிவாக......

ஆல: சொல்கிறேன் கேள். அரசன் என் எண்ணத்தை ஒட்டி அரசாட்சி நடத்துவதே இல்லை. அவன் என்று அந்தத் தமிழ்ப்பண்டிதன் ஞானசாகரனைச் சந்தித்தானோ அன்றிலிருந்து அவனது போக்கு, பார்வை, யாவும் மாறிவிட்டது! வேதங்களை மதிப்பதில்லை—பிராமணருக்குச் சரிவரத் தானம் செய்வதில்லை. தெய்வத் தொழுகையைக்கூட சுத்தமாய் நிறுத்திவிட்டான். எல்லாம் அந்த பரதேசிப் பயலால் வந்த வினைசம்!

கரு: நமது சமண ஸ்வாமிகளையா சொல்கிறீர்?

ஆல: (கோபமாக) யாரடா அவன்....ஸ்வாமி?

கரு: (திடுக்கிட்டு) ஹூம்...தாங்கள்...தாங்கள்தான்...தாங்கள்தான் ஸ்வாமி! ஹூம் அவன் கிடக்கிறான் பரதேசிப் பயல்....! தங்கள் தபோ வலிமை — சாமர்த்தியம் — சாணக்கிய தந்திரம்—முதலியவைகள் ஜெகமெங்கும் புகழ்பெற்றதாயிற்றே! ...அப்படியிருக்க......!

ஆல: சபாஷ்! அது ஒழியட்டும். கருநாகா, நான் சொல்வதைக் கவனமாய் கேள். அறிவுடன் நடந்துகொண்டால் நீ விரும்பும் பதவி கைமேல்!

கரு: ஸ்வாமி, எனக்கு நீண்டநாளாக ஒன்றின்மேல் ஆசை......!

ஆல: எதன்மேல்? பதவியின்மேல்தானே?

கரு: ஆம் ஸ்வாமி!

ஆல: சரி, நான் சொல்லப் போகும் காரியத்தை மட்டும் முடித்துவிட்டால் நீவருங்காலப் படைத்தலைவனாக ஆக்கப்படுவாயென்று இப்போதே பிரமாணம் செய்கின்றேன்!

கரு: (பேராசையுடன்)ஆ... உண்மையாகவா?

ஆல: ஆச்சரியப்படாதே. அவசியம் நீ படைத்தலைவனாக ஆக்கப்படுவாய். ஆனால் நீ மட்டும் நான் சொல்லும் காரியத்தைத் திறமையாக......

கரு: செய்துமுடிப்பேன்!சேதியைச்சொல்லுங்கள்ஸ்வாமி!

ஆல: நமக்கு எதிரியாக எவர் தோன்றினும் அழியவேண்டியதே! இல்லையா?

கரு: (முகஸ்துதியாக) ஆஹா சந்தேகமின்றி!

ஆல: அப்படியானால் அரசன் முதலில் ஒழியவேண்டும்!

கரு: (திடுக்கிட்டு) ஆ....!

ஆல: (கேலியாக) என்ன... கருநாகா! பூ...இவ்வளவுதானா உன் தீரம்...வீரம்—ஆர்ப்பாட்டமெல்லாம்?

**கரு:** ஹூம்....ஒன்றுமில்லை ...ஸ்வாமி நான் சொன்ன சொல் தவறமாட்டேன்....நீங்க மட்டும்...!

**ஆல:** நிச்சயமாய் உன்னைக் கவனித்துக்கொள்வேன். இன்றிரவு என்னை வந்து பார். பத்திரம். இதை எவரிடமும் மூச்சு விடாதே. சென்றுவா....!

**கரு:** என்னை நம்புங்கள் ஸ்வாமி....! (வணங்கிப் போகிறான்)

**ஆல:** ஜேய் சங்கர்.........! (போகிறான்).

---

## அங்கம் 4

**இடம்:** அரசன் விசாரணை மண்டபம்.

[அரசன், அரசி, இளவரசி, இராஜகுருவின் மகள் திலோத்தமா, மந்திரி முதலியோர் அமர்ந்திருக்கின்றனர். அருணன் கைதிக்கூண்டில் நிறுத்தப்படுகின்றான். அருணனின் கம்பீரமான உருவம், அழகிய முகவிலாசம், திண் தோள்கள், பரந்த மார்பு இவை அரசி காஞ்சனாவையும், திலோத்தமாவையும் அதிகம் கவர்கின்றன. எல்லோரும் எழுந்து மரியாதை செய்கின்றனர் இராஜகுரு வந்ததும்...]

**ஆல:** ஜேய் சங்கர்!

[ஆடம்பரமாய் அமருதல்]

**அரசன் முகில்வண்ணன்:** வாலிபனே, உன் பெயர்?

**அருணன்:** வேந்தே, என் பெயர் அருணன் என்பது. தங்களது பிரியத்திற்குப் பாத்திரமான ....சிற்பி சிங்காரவேலரின் மகன் நான்...!

**முகில்:** (ஆச்சரியமுடன்) என்ன....சிற்பியின் மகனா நீ? அதுசரி. வாலிபனே, நீ ஏன் இந்த அந்தணோத்தமர்களை அவமானம் செய்தாய்? ஓர் சீர்திருத்தவாதியின் மகனா இத்தகைய இழி செயல் புரிவது?

**அரு:** அரசே இது அபாண்டமான குற்றம்.

[பக்கத்திலுள்ள பிராமணர்களைக் காட்டி]

இதோ நிற்கும் இவர்களில் கடைசியில் நின்றுகொண்டிருப்பவரான சம்பத்து சாஸ்திரி அவர்கள் இரண்டு நாளைக்கு முன்பு பெரிய புராண பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். அது பகுத்தறிவுக்கேற்ற இலக்கியமல்ல, வெறும் புளுகுகள் மலிந்துள்ள ஓர் புராணக் குப்பை—அதிலுள்ள தவறான கருத்துக்களை மக்கள் பால் செலுத்தி அவர்களை மடமைக் குழியில் வீழ்த்தாதீர்களென்று தான் சொன்னேனே தவிர வேறெந்தவிதமான பலாத்காரச் செய்கைகளிலும் நான் ஈடுபடவே இல்லை. என் மனச்சாட்சிக்கு விரோதமின்றி சொல்லுகின்றேன். இவ்வளவுதான் அன்று நடந்தது!

**இராஜகுரு ஆளவாயர்:** சுத்தப் பொய்...! வேத விற்பன்னர்கள்—உயர்ந்த குலத்தவர்கள்—உத்தம அந்தணர்கள் எங்காவது பொய் சொல்லுவார்களா?

**அரு:** ஆனால் சொல்லியிருக்கின்றார்கள்! பொய்ச் சாதனை-சூது-வாது-பேராசை எல்லாம் நிறைந்தவர்கள்தானே அந்தணர்களில் பெரும்பாலோர்! இது நான் சொல்வதல்ல—வரலாறு சாற்றும் மறுக்க முடியாத உண்மை பூஜ்யரே!

**ஆல;** நாஸ்திகப் பதரே உன் நாக்கு அழுகிப்போகும்! ஏ. ராஜன், இவன்தான் பொய் சொல்லுகிறான். இவனை மனு சாஸ்திரப்படி சத்தியம் செய்யச் சொல்லுங்கள். அப்போது தெரிந்துவிடும் இவனது யோக்யதை!

**முகில்:** அது என்ன ஸ்வாமி?

**ஆல:** பழுக்கக் காய்ச்சிய மழுவைக் கையிலெடுக்கச் சொல், அப்படி எடுக்கும்போது அவனது கை வேகாமலிருந்தால் இவனது வார்த்தைகள் சத்தியம்நிரம்பியவை என்று உணர்ந்து கொள்ளலாம்!

**முகில்:** குருவே, இது காட்டுமிராண்டிச் செய்கை, இதற்கு நான் ஒருக்காலும் ஒப்பவே மாட்டேன்.

**அரு:** இல்லை...இல்லை...... மனுவுக்கு நேர் வாரிசு — மனுவின் மறுபிறப்பு இவரல்லவா! ஆகவே தான் மனு ஏற்படுத்தியுள்ள கொலைச் சட்டங்களை செய்கையில் செய்து பார்க்க விரும்புகிறார்! ஏன், பூஜ்யரே, இதோ நிற்கும் உங்கள் வாக்கத்தாரில் ஒருவரையாவது அல்லது நீரேயாவது நீர் சொன்ன சத்தியத்தைச்செய்து காட்டும் பார்க்கலாம். அப்போது உமது கரம் வேகாமலிருந்தால் நீர் எத்தகைய தண்டனையை எனக் களித்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுகின்றேன்...! முடியுமா உம்மால்? ஏன் திகைக்கிறீர்? இல்லையென்றால் இவர்களில் யாருக்காவது திறமையிருந்தால் என்னுடன் வாதம் புரியச் சொல்லுங்கள். வேண்டுமானால் நீரேகூட வரலாம! இந்த இடத்தில்!

**ஆல:** என்ன அகம்பாவம்... மன்னர் போற்றும் ராஜகுரு—மக்களின் தேவனான நானு, செல்லம் சருகுக்கு சமமான உன்னுடன் வாதம் புரிவது? ஏ, ராஜன்! இவனை நீ தண்டிக்காவிட்டால் வேதஸ்மிருதி முறைகளிலிருந்து தவறியவன் ஆகிறாய். அப்படித் தவறினால் உன் முடிவு மிகவும் பரிதாபகரமாகவே முடியும் என்று எச்சரிக்கின்றேன்.

**அரு:** வெறும் உளறல்கள்... அபத்தங்கள். மமதைக்காரர்களின் வழிதேதானறல! நீர் ... போது அரச அவையில் உள்ள... தாலும, அரசருக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டிய நிலையில் நா... இருப்பதாலும் நீர் பிழைத்தீர்...

# திராவிட நாடெங்கும் தி. மு. க. முழக்கம்!

## பகுத்தறிவுப் பாசறைகள், பார்க்குமிடமெங்கும்!

### திராவிடமாணவர் முன்னேற்றக் கழகம், செயங் கொண்டம்

ஆச்சாரியார் வருகையின் பொழுது சென்னையிலும் பேச்சுரிமைப்போரின் சமயம் குன்றத்தூரிலும் தடியடி கொண்டு தாக்கியும் துப்பாக்கி கொண்டு சுட்டும் அடக்குமுறை செய்த ஆட்சியாளர் போக்கைக் கண்டிக்கும் முகத்தான் 28-10-50ந்தேதி மாலை 3 மணிக்கு தோழர் இளநாகன் அறையில் கண்டனக் கூட்டம் கூட்டப் பட்டது. அதுபோது தோழர் அரங்கநாதன் தலைமையில் தோழர்கள் இலக்குவன், இளநாகன், ஆ. இராமசாமி ஆகியோர் காங்கிரஸ் ஆட்சியாளர் கண் மூடித்தனமாக சென்னையிலும், குன்றத்தூரிலும் நடந்து கொண்டதைக் கண்டித்துச் சொற்பொழிவாற்றினர்.

அவ்வமயம் தி. மா. மு. க. நிறுவப்பட்டது. தோழர்கள் சு. இளநாகன் செயலாளராகவும் கு. இலக்குவன் துணைச்செயலாளராகவும், இரா. கூத்தரசன் பொருளாளராகவும், ஆ. இராமசாமி விளம்பர உறுப்பினராகவும் கொண்ட 'செயற்குழு' ஒன்று நிறுவப்பட்டது.

### பாலூர் சந்திரம தி. மு. க. கிளை

12-11-50-ல் இக்கழகக் கூட்டம் கூடி, கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சென்னை தடியடிக்கும், குன்றத்தூர் துப்பாக்கிப்பிரயோகத்திற்கும் இக்கழகம் சர்க்காருக்குத் தன் கண்டனத்தைத் தெரியப்படுத்திக் கொள்வதோடு, சர்க்கார் அதை ஒரு பிரத்தியேக நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

### அரக்கோணம் தி. மு. க.

26-11-1950, ஞாயிறு மாலை தோழர், A, L, C, சஞ்சீவி அவர்கள் இல்லத்தில் தக்கோலம் தோழர் K, R, மாணிக்கம் தலைமையில் அரக்கோணம் நகர திராவிட முன்னேற்றக்கழகக் கிளையின் புதிய செயற்குழு பின் குறித்த வண்ணம், தேர்ந்தெடுக்கப் பட்டது.

செயலாளர்: A, L, C, சஞ்சீவி.
துணைச் செயலாளர்: M, சாமுவேல்.
பொருளாளர்: தாமஸ்.

விளம்பர உறுப்பினர்கள்: 1. தணிகைவேல் T, 2, அனிப்.

### நாரணபுரம் பொதுக் கூட்டம்

3-12-50ல் நாரணபுரம் (சங்கரநயினார் கோவில் வட்டம்) தி. மு. கழகத் துவக்கவிழாப் பொதுக் கூட்டம் சங்கர நயினார் கோவில் நகர தி. மு. கழக செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. தோழர்கள். க. இராசேந்திரன், ஆ திராவிடமணி, அறுப்புக் கோட்டை, எம். எஸ். இராமசாமி ஆகியோர் வடநாட்டுச் சுரண்டல், திராவிட நாடு தனித்தியங்கவேண்டிய அவசியம் பற்றி விளக்கமாகப் பேசினார்கள்.

### திராவிட மாணவ முன்னேற்றக் கழகக் கூட்டம் சங்கரநயினார் கோவில்

4-12-50,ல் சங்கரநயினார் கோவில், நகரதிராவிடமாணவ முன்னேற்றக்கழகத் துவக்க விழாப் பொதுக் கூட்டம், திருவேங்கடம் சாலைத் தெரு வள்ளுவர் திடலில், நகர தி மு, கழகச் செயலாளர் தோழர், டி, ஆர், சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. தோழர்கள், க, இராசேந்திரன், ஆ, திராவிடமணி, இரா, சு, தங்கப் பழம் அறுப்புக் கோட்டை எம், எஸ், இராமசாமி ஆகியோர்கள் மாணவர் கடமை பற்றி விளக்கமாகப் பேசிய பிறகு, கம்யூனல் ஜீ. ஓ. வை ஆதரித்தும், கைத்தறி நெசவாளர்கள் மீது கவனம் செலுத்தப் போதிய நூல் கொடுத்து உற்பத்தியாகும் துணிகளுக்குச் சரியான மார்கட்டு ஏற்படுத்தித் தரவேண்டுமென சென்னை சர்க்காரையும் மத்தியசர்க்காரையும் கேட்டுக் கொண்டும் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

### கூடநகரம் (குடியேற்றம்) புதிய கிளை

3-12-50ல் இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் தோழர் குழந்தை வேலு அவர்களின் இல்லத்தில், தோழர், ரங்கப்பா, அவர்களின் தலைமையில் கூடிய போது,

இவ்வூர், தி. மு. க. கிளை நிறுவப் பட்டு, அதன் செயலாளராக தெ, திரு, கோவிந்தராசும். துணைச் செயலாளராக திரு, ஒலியழகனும், பொருளாளர்களை, அ, தட்சணாமூர்த்தியும், விளம்பர உறுப்பினராக இர, கனேசனும், செயற்குழு உறுப்பினராக பி, சக்கரவர்த்தி, முதலிய தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

**பெங்களூர் சிடி**

**அக்கிப்பேட்டை**

**தி. மு. க. பொதுக் கூட்டம்.**

★

31—12—50 ஞாயிறு மாலை 4 மணிக்கு பெங்களூர் சிடி பளேபேட்டை S. S. K. சங்கக் கட்டடத்தில் திரு. அ. கு. பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறும்.

**பேச்சாளர்கள்:**

சி. பி. சிற்றரசு,
புலவர் ஆ. மணிமொழியன்.

---

### தோழமைக் கழகம் (10 வது வட்டம்) சென்னை

3-12-50ல், நடந்த தோழமைக் கழகப் பொது அங்கத்தினர்களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்,

(1) 27-11-50ல், நாராண மங்கலத்தில் நடக்க இருந்த பொதுக் கூட்டத்திற்கு 15 நாட்களுக்கு முன் அரசாங்கத்தாருக்கு அறிவித்திருந்தும் அரசியலார் அங்கு பேச்சுமையைத் தடுக்க 144 பிறப்பித்ததை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

(2) பேச்சுரிமையைக் காக்கத் தடையை மீறிய தோழர்களை சிறைக்குள் அடைத்து அங்குக் கூடியிருந்த பொது மக்களையும் மற்றவர்களையும் தடிகொண்டு தாக்கிய, அரசியலார் போக்குக்கு வருந்துகிறது.

[3] முன்னேற்றக் கழகம் சார்பில் பேச்சுரிமையைக் காக்கக், களிப்புடன் சிறைக் கோட்டம் புகுந்த வீரத்தோழர்களையும் தடியடிபட்ட தோழர்களையும் பாராட்டுவதுடன் அவர்களுக்குத் தோழமைக் கழகம் வீரவணக்கத்தைச் செலுத்துகிறது.

### சென்னை 4-வது வட்டம் தி. மு. க.

4-12-50, திங்கட் கிழமை மாலை 7மணிக்கு சோலையப்பன் தெரு 112ம் என் இல்லத்தில் சென்னை 4வதுவட்ட தி, மு, க, செயற்குழுவினர் கூட்டம் கழகச் செயலாளர் R, பாண்டியன் தலைமையில் நடைபெற்றது, அப்போது, செயற்குழுவினர்களான பொ, மாரியப்பன், S, தங்கவேல், மு, சேர்மன், C, முனுசாமி, N, தனபாலன், R, ஆறுமுகம், A. M, முத்தையா, C, S, மணி P. M, மணி, த, சே, அரசு, இவர்களினால் 4வது வட்ட தி, மு, கழகத்தின் வளர்ச்சிக்குத் தேவையான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கடய நல்லூர், தி, மு. கழகப் பொதுக் கூட்டம்

5-12-50-ல் இந்நகர் மறுமலர்ச்சி மைதானத்தில், தி, மு, கழகப் பொதுக்கூட்டம், நெல்லை மாவட்ட தி, மு, கழகவிளம்பர உறுப்பினர், சங்கரநயினார் கோவில் தோழர், டி, ஆர், சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின் கீழ்நடைபெற்றபோது, தோழர்கள் இரா, செயலழகன், முகமது அலி, ஆ. திராவிட மணி, அறுப்புக்கோட்டை எம், எஸ், இராமசாமி ஆகியோர் கைத்தறியாளர்களின் வாழ்வை வதைத்துவரும் வேதனைகள் குறித்து விளக்கிப் பேசினார்கள்.

### வாட்டாகுடி தி. மு. க.

5-12-50 மாலை 6 மணிக்கு வாட்டாகுடி கிளைக்கழகச் செயற்குழுவினர் கூட்டம் கூடி, தஞ்சை மாவட்டமாநாடு கூடியசீக்கிரத்தில் ஆரம்பிக்கவேண்டுமென்று பொதுச் செயலாளர் அண்ணா அவர்களைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### திருவேங்கிடபுரம் புதியகிளை

இராமநாதபுரமாவட்டம், திருவேங்கிடபுரம், தி, மு, கிளைக்கழக அமைப்புக்கூட்டம் தோழர் தமிழரசன் தலைமையில் ஸ்ரீ பூர்சத்திரத்தின் முன்பாயுள்ள மைதானத்தில் கூட்டப்பட்டது. கீழ்கண்டவர்கள் செயற்குழுவினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்,

செயலாளர்: தமிழரசன் துணைச்செயலாளர், R, சங்கையா பொருட் காப்பாளர், சின்னச்சாமி விளம்பர உறுப்பினர், சண்முகம்.

### திராவிட முன்னேற்றக் கழகம் திருவனந்தபுரம்

10-12-50 மாலை 4 மணிக்கு கழகக் கட்டிடத்தில் வைத்து நடந்த பொது அங்கத்தினர் கூடத்தில் இது வரை பணியாற்றி வந்த செயற்குழு கூட்டம் கலைக்கப்பட்டு கீழ்க்காணும் முறையில் புதிய குழு அமைக்கப்பட்டது.

பொதுச் செயலாளர் M. நல்லசிவம்.

துணைச் செயலாளர் C. P. செல்லம்

விளம்பர உறுப்பினர் T. S. மணி.

பொருளாளர் M. சிவராசு.

மாவட்ட பிரதிநிதிகள். T. M. P. சுவாமி, சங்கர்.

### இலங்கை எல்பிட்டியாவில் அண்ணா மன்றம்

10-12-50. ஞாயிறு மாலை. இலங்கை எல்பிட்டியாவைச் சேர்ந்த பத்திராசித் தோட்டத்தில் தோழர் எம். நடேசன் அவர்களது இல்லத்தில் திரு. கே. எம். எஸ். கலாநேசன் அவர்களது தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் "அண்ணாமன்றம்." நிறுவப் பட்டது. தோழர்கள் ஏ. வெ. அன்பானந்தன் செயலாளராகவும், எம். நடேசன் துணைச் செயலாளராகவும், ஏ. ஜார்ஜ் பொருளாள ராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

### மேல் பட்டாம் பாக்கம் தி. மு. க. பொதுக் கூட்டம்

11-12-50 இவ்வூர். தி. மு. கழகத்துவக்கவிழாப்பொதுக்கூட்டம், திங்கள் மாலை ஆறுமணிக்கு, தோழர், தியாகராராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போது. தோழர்கள், கோ, பாண்டுரங்கன், சி, இளவழகன் இரா, நெடுஞ்செழியன், M, A, முதலியவர்கள், சொற் பொழி வாற்றினார்கள், கூட்டத்திற்கு, சுமார், இரண்டாயிரம் பொதுமக்கள் கூடியிருந்தனர். தோழர், நெடுஞ் செழியன் அவர்கள் சுமார் இரண்டு மணி நேரம், வீரவுரையாற்றினார்கள், இரவு 9, மணிக்கு இராச கோபாலன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

### மாரண்ட அள்ளி தி. மு. க.

இக் கழகக் கூட்டம் 11-12-50 மாலை 7 மணிக்குக் கழக வாசகசாலையிற்கூடி, விரைவில் சேலம் மாவட்ட மாநாட்டை நடத்தும்படி மாவட்டக் கழகத்தைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

### கமுதி தி. மு. க. கிளை

4-12-50ம் நாள் மாலை 4 மணிக்கு E. L. M. சௌந்திரபாண்டியன் இல்லத்தில் K. S. காமாட்சி தலைமையில் கூடி, புது செயற்குழு அமைக்கப்பட்டது. இ. ல, ம, சௌந்திர பாண்டியன் செயலாளர். K. S. காமாட்சி-பொருளாளர். வே. த. பாண்டியன்-விளம்பர உறுப்பினர்.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையேல், உம் கதி என்னவாகுமென்பதை என்னால் யூகிக்கவே முடியவில்லை. இந்த சருகிடம் சமர் செய்ய உமக்கு சாமர்த்தியமிருந்தால் வாருமே.. ஹும்...உமது பரம்பரைக்கே அது வெகு தூரமல்லவா....! புரியாத மந்திர தந்திரங்களை வைத்துக்கொண்டு ஏய்ப்பது தானே உமது பிழைப்பு...! உம்மையும், ஒரு பயனுள்ள பிராணி என்று அரசர் எந்தவிதத்தில் எண்ணிக்கொண் டிருக்கிறாரோ தெரியவில்லை!

முகில்: வாலிபனே அமைதியாய் இரு!

அரு: அரசே! அவரது அடாத சொற்கள் என்னைப் பொறுமையினின்றும் மீறச் செய்துவிட்டன. மன்னிக்கவும். வேந்தே, நான் அன்று இவர்களை எந்த விதமான இம்சையும் புரியவில்லை. எங்கே அவர்களது பிழைப்புக்குப் பங்கம்வந்து விடுமோ என்ற அச்சத்தினால் தான் இச் சதி செய்திருக்கின்றார்கள்.

முகில்: நீ சொல்வதற்கு சாட்சி?

அரு: மக்கள்தான் மன்னவா!

முகில்: அன்பு மக்களே, உங்களது தீர்ப்பு...?

புத. ஒளி: அரசே, அன்று நடந்த சம்பவத்தின்போது நான்கூட இருந்தேன். சமுதாயத்தில் வேர்க்கொள்ளும் இடரை — அதாவது மக்களை மாக்களாக மாறச் செய்யும் செய்கைகளை அழித்து ஒழித்தே தீருவேனென இவர் இடிமுழக்கம் செய்தாரேயன்றி, வேதியர் மேல் விரலைக்கூட நீட்டவில்லை. இதை நான் என் மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் சொல்கிறேன்.

வேதா: ஆம் அரசே, இவர் சொன்னது அத்தனையும் அப்பட்ட உண்மை!

எல்லோரும்: அருணர் குற்றவாளி யல்லர்— அவரை விடுதலை செய்......துரோகிகளை தூக்கிலிடு!

மணி: அமைதி....அமைதி ...அமைதி....!

முகில்: அருணா, அன்று சம்பந்த சாஸ்திரியார் பிரசங்கம் புரிந்தாரே அதற்கு எந்த விதமான மறுப்புரை கொடுக்கின்றாய்? நீ சொல்லும் காரணம் சரியாக இருப்பின் விடுதலை பெறுவாய் இல்லையேல் கெடுதலையை அடைவாய்!

அரு: சத்திரவு! வேந்தே! அன்று இவர் சொன்னதாவது சைவ சமயத்தின் பெருமையை நிலைநாட்ட சம்பந்தர் இரண்டு பரீட்சைகளை ஏற்படுத்தினார் என்பது. அவைகளில் ஒன்று நீர் — மற்றொன்று நெருப்பு! முதலில் சம்பந்தர் ஓலையை நெருப்பிலிட்டார் அது எரிந்து கரியாகப் போகாமல் அப்படியே இருந்தது. ஆனால் சமணர்கள் இட்ட ஓலை எரிந்து சாம்பலாகி விட்டது. சபையோர்களே நீங்கள் நன்கு சிந்திக்கவேண்டும். சமணர்கள் நெருப்பிலிட்ட ஓலை எரிந்து சாம்பலாகிவிட்டதென்பது இயற்கைக்கு ஒத்ததே! ஆனால் சம்பந்தரிட்ட ஓலைமட்டும் எரியாதிருக்கக் காரணமென்ன? ஒரு வேளை நெருப்பு சரியாக எரியாமலிருந்திருக்கலாம் அல்லது நெருப்பில் இடப்பட்ட ஏடு எரியமுடியாத அளவுக்கு அதனை அழுக்கு மூடி இருக்கலாம் ஏனென்றால் ஆலயங்களிலே உள்ள ஆண்டவர்களும் இப்படித்தான் அவை என்ன வடிவம் என்று கண்டுகொள்ள முடியாத அளவுக்கு அழுக்கேறி இருக்கும்! அதுபோலவே சம்பந்தர் இயற்றியுள்ள தேவாரத்தை (சுவடியை) ஒரு வேளை எண்ணை காப்பு முதலியன சாத்தி அழுக்கேற்றிவைக்கப்பட் டிருக்கலாம். அதன் காரணமாக அது நெருப்பில் வேகாதிருந் திருக்கலாம்! அதற்காக அதை தெய்வத் தன்மையுடையதென்று யார் கூறமுடியும் இவர்களைத் (பிராமணர்களைச் சுட்டிகாட்டி) தவிர! நெருப்பானது ஒருவர் அறிந்து தொட்டாலும், அறியாமல் தொட்டாலும், நல்லவர் தொட்டாலும், தீயவர் தொட்டாலும் அதற்குச்சுடும்தன்மையே தவிர, குளிர்ச்சியைத் தரும் தன்மையுடையதல்ல வென்ற சாதாரண உண்மை எவருக்கும் தெரிந்ததே. தெரிந்தும் புராணத்திற்குப்புத்துயிரளிக்க சேக்கிழார் புளுகி இருப்பதைஇந்தப் பெருமான் (சம்பந்த சாஸ்திரி) பிரசங்கம் செய்கிறார்.......மற்றொன்று ஓலையை ஓடும் ஆற்றுத் தண்ணீரில் இடுவது. இதிலும் சம்பந்தரே வெற்றி பெற்றாராம். பெரியோர்களே, ஒரு ஏடு, ஆற்றில் அதுவும் வெள்ளத்தில் அடித்துச் செல்லும்போது கரையிலுள்ள ஒருவன் அதுவும் குதிரைமீது சவாரி செய்து கொண்டு வெகு வேகமாக வருபவன் எங்ஙனம் அதைக் காண முடியும்? ஆற்று நீரோட்டத்தில் பல பொருள்களும்தான் அடித்துச் செல்லப்படும். அப்போது சம்பந்தர் இட்ட ஏட்டை மட்டும் குதிரைமீது சவாரிசெய்துகொண்டு சென்ற குலச்சிறையார் எப்படி அறிந்தார்? ஏன், சம்பந்தர் ஒன்று செய்திருக்கலாமே..........ஏடே போனது போதும் திரும்பி வந்துவிடு, என்று ஏன் ஒரு பாடல் பாடி வரவழைக்கக் கூடாது? அப்படிச் செய்த சமணர்கள் அதை ஒப்புக் கொள்ளமாட்டார்களா? இவைகள் எப்படி இருக்கின்றன என்றால் கைகால்களற்ற முடவன் மணலைக் கயிறாகத் திரித்து அதை அந்தரத்திலே ஒட்ட வைத்து, ஏறி சுவர்க்கம் சென்று அங்குள்ள அழகிய அணங்கைக் கொணர்ந்தான் என்பதுபோன்ற கதையாய் அல்லவோ இருக்கின்றது! இந்தச் சமயங்களும், அவைகள்

(7-ம் பக்கம் பார்க்க)

போங்கல் நன்னாளில்! உங்களை மகிழ்விக்க வருகிறது!

# "போர்வாள்" பொங்கல் மலர்—1951

உ[illegible] [illegible]ங்கள் மலர்ந்த சோலை! ☆ புரட்சிக்கருத்துக்கள் பொதிந்த கருவூலம்!

உள்ளத்தை அள்ளும் சிறுகதைகள், செந்தமிழைப் பிழிந்தெடுத்த கட்டுரைகள், இ[illegible] நடனம் புரியும் எழில்மிகு கவிதைகள், உலகைத் திருத்திய உத்தமர்[illegible] [illegible] கண்ணைக் கவரும் ஓவியங்கள் மற்றும் பல [illegible] [illegible]திகள் நிறைந்தது.

எழில்மிகு பதிப்பு — விலை அணா 8

ஏஜண்டுத் தோழர்கள் தங்கட்குத் தேவையான படிகளின் எண்ணிக்கையை உடனடியாகத் தெரிவிக்கவேண்டுகிறோம்.

---

## காஞ்சிபுரம் மாநாட்டில்

போர்வாள்—பாசறை அலுவலகங்கள்

காஞ்சிபுரத்தில் டிஸம்பர் 23, 24-ல் நடைபெறும் செங்கற்பட்டு மாவட்ட மாநாட்டில்,

போர்வாள்—பகுத்தறிவுப் பாசறை அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. பாசறை வெளியீடுகள், இதர இயக்க புத்தகங்கள், 1951 திராவிடர் நாட்குறிப்பு முதலியன அங்குப் பெற்றுக் கொள்ளலாம்.

போர்வாள் சந்தாவும் செலுத்தலாம்.

---




சொற்ப பிரதிகளே கைவசம் உள்ளன! ★ வேண்டுவோர் உடனே தெரிவிக்க!

## திராவிடர் டைரி—1951

திராவிடர் அனைவரும் பெற்றிருக்க வேண்டிய மிகச்சிறந்த நாட்குறிப்பு ★ ஒவ்வொரு தி. மு. க. தோழருக்கும் பூரிப்பளிக்கத்தக்க புதுவகை வெளியீடு

இளைஞர் உலகத்தின் இதயகீதமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய எல்லாவிவரங்களும் அடங்கிய எழில்மிகு ஏடு.

அழகான அமைப்பு 550 பக்கங்கள் விலை அணா 14

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரணத் தபாலில் அனுப்ப ரூ 1—0—0-ம், பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—4—0-ம் அனுப்பவேண்டும்.

விற்பனையாளர் கழிவு 20 o/o அனுப்பும் செலவு வேறு.

முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்பட மாட்டாது.

**போர்வாள் அலுவலகம்** பவழக்காரத் தெரு சென்னை 1.

Edited, Printed and Published bY F. C. Manickavachagam alias Kanchi Manimoliyars Free Printers 147, C al Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.(Hon)